விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி 25 | வெள்ளிக்கிழமை (11.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 327

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

(மருதங்கேணி)

வடமராட்சி புலோலி மேற்குப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மின்கம்பத்திலிருந்து மின்சாரம்பெற முயன்றபோது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இச் சம்பவத்தின்போது அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி அமிர்தலிங்கம் (வயது 41) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். இறந்தவரின் சடலம் மரணவிசாரணையின் பொருட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-35,8)

## ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு யாழில் கொத்தணி வாக்குச் சாவடிகள்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைப்பதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் 624 வாக்குச்சாவடிகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்த நிலையில் பாதுகாப்புக் காரணங்களை கருத்திற்கொண்டு சில வாக்களிப்பு நிலையங்களில் கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைப்பதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதன்படி யாழ். மாவட்டத்தில் கொத்தணி வாக்குச்சாவடிகள் அடங்கலாக 118 நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படும் வாக்களிப்பு நிலையங்களே கொத்தணி வாக்குச்சாவடிகளாக மாற்றப்படவுள்ளது.

கொத்தணி வாக்குச்சாவடிகளாக மாற்றப்படவுள்ள இடங்கள் குறித்த விபரங்களை தேர்தல் திணைக்களம் பத்திரிகைகள் ஊடாக வெளியிடுமென யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை முகமாலையில் 103 கொத்தணி வாக்குச்சாவடிகளும், மருதங்கேணியில் 8 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்படவுள்ளன. (ச)

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை



## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

(கிளிநொச்சி)

**ஜனாதிபதித் தேர்தலின் மூலம் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.**

**இதனால் தமிழ்மக்கள் அனை வரும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் குறித்து அக்கறைகொள்ளத் தேவையில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுச் சந்தித்துப் பேசினர். அதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே சம்பந்தன் இதனை உத்தி யோகபூர்வமாக அறிவித்தார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு பேச்சுவார்த்தை ஆரம்பமாகி பிற்பகல் 3 மணிவரை இடம்பெற்றது. தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் உட்பட மூத்த உறுப்பினர்களும், கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின் பின்னர் இரா. சம்பந்தன் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் மாறிமாறி வந்த சிங்களப் பேரினவாத அரசியல் தலைமைகள் எதுவிதமாக தமிழ்மக்களை நடத்தினார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எப்படிச் செயற்பட்டார்கள். தமிழ்மக்கள் இராணுவ ரீதியாக எப்படியெல்லாம் ஒடுக்கப்பட்டார்கள். இனப்படுகொலையை அரசுகள் எப்படியெல்லாம் நடாத்தின என்பன தொடர்பாக இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த மூன்றரை வருட காலமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி அரசும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசும் எப்படியாக செயல்பட்டன என்பது பற்றியும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் தமிழ்ச்செல்வனும் தனது கருத்தைத் தெரிவித்தார். ஜனா திபதித் தேர்தலால் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ்மக்கள் விரும்புகின்ற ஒரு தீர்வு ஏற்படமுடியாதென இச்சந்திப்பில் இறுதியாக முடிவெடுக்கப்பட்டது என சம்பந்தன் தெரிவித் தார்.

அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம், சமாதான காலம் ஆகியவற்றை மனதில் வைத்துத் தேர்தலை அணுகுகின்றபோது இத்தேர்தலில் தமிழ்மக்கள் அக்கறைகாட்ட வேண்டியதில்லை. இத் தேர்தலில் தமிழ்மக்கள் அக்கறை காட்டுவதன் மூலமாக எதுவித நன்மையும் அடையமுடியாதென்பது எங்களின் திடமான கருத்து.

தற்போது தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளினது வேட்பாளர்களும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு ஆட்சியில் இருந்திருக்கிறார்கள். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுரேஷ் எம்.பியின் வீட்டின் மீது நேற்றுக் கைக்குண்டு வீச்சு!

(திருநெல்வேலி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்குச் சொந்தமான பருத்தித்துறை வீதி கட்டப்பிராயில் உள்ள வீட்டின் மீது நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் இரு கைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வீசப்பட்ட கைக்குண்டுகள் வீட்டின் முன்பகுதியில் விழுந்து வெடித் துள்ளதால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சுரேஷ் பிரேமச்சந்திரனின் கட்டப்பிராய் வீடு தேர்தல் காலத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-43,4)

## தமிழ் மக்களின் தீர்மானங்களுக்கு புலிகள் பக்கபலமாக இருப்பர்!

### சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்து



(கிளிநொச்சி)


ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மக்களின் அபிலாஷைகள், உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் தீர்மானங்களுக்குப் பக்கபலமாக இருப்பதாக தீர்மானிக்கப்பட்டதாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்புத் தொடர்பாக தமிழீழ தேசியத் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கூட்டமைப்பினருடன் மக்களின் அபிலாஷைகள், உணர்வுகளின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் பற்றி ஆராய்ந்தோம். ஒட்டுமொத்த தமிழ்மக்களும் இத் தேர்தல் பற்றி (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பர்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பில் ஈடுபட்டிருந்த போது பிடிக்கப்பட்ட படம்.

# பட்ஜெட்டை ஆதரிக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி



(கொழும்பு)

அரசாங்கம் தாக்கல் செய்துள்ள வரவு செலவுத்திட்டத்தில் சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையான 'மகிந்தவின் சிந்தனைகள்' எதுவும் இடம்பெறவில்லையென்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பாராளுமன்றின் உறுப்பினர் மிலிந்த மொறகொட ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர். திஸ்ஸ அத்தநாயக்கா இது தொடர்பில் கூறுகையில் ,இந்த வரவு-செலவுத்திட்டத்தில் மகிந்தவின் சிந்தனைகள் இடம் பெறவில்லை.

ஜனாதிபதி சந்திரிகாவின் யோசனைகளே இடம்பெற்றுள்ளன. இருப்பினும் உரவிலை குறைப்பு,வாழ்க்கைச் செலவினக்குறைப்பு ஆகியவை குறித்து வரவு-செலவுத்திட்டத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

70 வீத ஊதிய உயர்வு இரண்டாம் முறையாக நிராகரிக்கப்பட்டிருக்கிறது. வேலை வாய்ப்புக்களை தொடர்வது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இவையனைத்தும் ஜனாதிபதித் தேர்தலுக்குப்பின்னர் தாக்கல் செய்யப்படவுள்ள நிதிநிலை அறிக்கையில் இணைத்துக் கொள்ளப்படும் என்றார்.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்தமொறகொட இது தொடர்பில் கூறுகையில், மகிந்த ராஜபக்ஷவினது தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள அம்சங்கள் தற்போதைய வரவு செலவுத்திட்டத்தில் இல்லை.

மகிந்தவின் தேர்தல் அறிக்கையில் நிறைவேற்றப்பட முடியாத வாக்குறுதிகளைக்கொண்டிருக்கிறது. ஆனால் வரவு செலவுத்திட்ட அறிக்கையானது அரசாங்கத்தின் நிர்வாகச்செயற்பாடுகளை எதிரொலிக்கிறது.

இந்த திட்ட அறிக்கையில் வாக்குறுதிகள் இடம்பெறுவதற்கான அவசியமில்லை மகிந்தவின் தேர்தல் அறிக்கையில் அடிப்படையாக நாம் முகம் கொடுக்கும் பொருளாதார பிரச்சினை குறித்து எதுவும் இல்லை. வாழ்க்கைச் செலவினக்குறைப்பு குறித்த அவசிய தேவை பற்றியோ இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு குறித்தோ எதுவும் சொல்லப்படவில்லை.

வரவு செலவுத்திட்டத்தில் சில வாக்குறுதிகள் இணைக்கப்பட்டிருப்பதாகவும் நாம் கருதுகிறோம்.அனைத்து குழந்தைகளுக்குமான நாளாந்த உணவுத்திட்டம், விவசாயிகளுக்கான மானிய உயர்வு ஆகியவைகள் பாரிய செலவினங்களைக் கொண்டது. அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நிதியமைச்சர் கூறியிருப்பதுபோல் 6.9 வீதமான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு பல முட்டுக்கட்டைகள் உள்ளன என்றார். (ற)

## அனுமதியின்றி நிர்மாணிக்கப்படும் கட்டடங்களுக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் அனுமதியின்றி கட்டடங்கள் பல நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தவிர்த்து நல்லூர்ப் பிரதேச சபையின் அனுமதியையும் தொழில் நுட்ப ஆலோசனையையும் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

அனுமதி பெறாது கட்டப்படும் கட்டடங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென கொக்குவில் பிரதேச சபையின் உபஅலுவலக பொறுப்பதிகாரி எஸ். பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ற-36)

## புனரமைக்கப்பட்ட குளங்களில் மழை நீர்—விவசாயிகள் மகிழ்ச்சி

(மருதங்கேணி)

பருத்தித்துறை ,கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுகளில் நிறுவனங்களால் புனரமைப்புச் செய்யப்பட்ட குளங்களில் மழை நீர் நிரம்பி வழிவதனால் விவசாயிகள் பெரும் நன்மையை எதிர்பார்க்கின்றனர்.

மேற்படி பிரிவுகளில் நியாப் திட்டத்தின் கீழ் உலக உணவுத்திட்டத்தின் 10 ஆயிரம் குளத்திட்டத்தில் மாகாண சபை நிதியினால் புனரமைப்புச் செய்யப்பட்ட குளங்களே இவ்வாறு நீர் நிரம்பி வழிவதன் மூலம் விவசாயிகளின் பயிர்ச்செய்கைக்கு உதவுமென விவசாயிகள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (அ-35)

# தபால்மூல வாக்களிப்பு வீதம் வடக்கு–கிழக்கில் குறைவு

## பவ்ரல் அறிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்பில் வடக்கு கிழக்கில் வாக்களிப்பு வீதம் பாரிய அளவில் குறைந்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் கண்காணிப்பாளர்கள் அறிக்கை அனுப்பியுள்ளனர்.

கடந்த 7 ஆம் 8ஆம் திகதிகளில் தபால் மூலமான வாக்களிப்பு நடைபெற்றது. கடந்த காலப் பொதுத்தேர்தல்களை ஒப்பிடுகையில், வடக்கு கிழக்கில் வாக்களிப்பதற்கு ஆர்வமற்ற நிலையிருந்ததாகவும் மிகச் சில வன்முறைகளே நடைபெற்றதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பத்து மாவட்டங்களின் வாக்களிப்பு வீதமும் குறைந்திருப்புதாகவும் சில இடங்களில் வாக்களிப்பு நிலையங்களின் அமைவிடத்தால் அரச ஊழியர்கள் வாக்களிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் 300 ஆசிரியர்களால் வாக்களிக்க இயலவில்லை. பதுளை,கேகாலை,கண்டி மாவட்டங்களில் வாக்களிப்பிற்கு பதிவு செய்யாதால் அவர்கள் வாக்களிக்கவில்லை.

சில வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகே பிரதான கட்சி வேட்பாளர்களினது பிரசார சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன என்றும் சில வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க கோருகின்ற துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதாகவும் பவ்ரல் அமைப்பினது அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. (ற)

# கண்ணி வெடிகள் அகற்றல்

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஆனைவிழுந்தான் வல்லிபுரம் பகுதிக்கும் பருத்தித்துறை மருதங்கேணி வீதிக்கும் வடக்குப் புறமாக உள்ள தரவைப் பகுதியில் ஏராளமான கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு உடனுக்குடன் வெடிக்க வைக்கப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை ஆனைவிழுந்தான் வல்லிபுரம் பகுதியில் மத்திய வகுப்பினருக்கு 1983 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அரச காணிகள் இரத்துச் செய்யப்பட்டு வடமராட்சி கரையோரப்பகுதி காணியில்லாத மக்களுக்கும், மத்திய வகுப்பினருக்கும் இக் காணிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக இக் காணிகளில் கண்ணி வெடிகள் அகற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-35)

# பிரதேச செயலர் கோரிக்கை

(பச்சிலைப்பள்ளி)

கடந்த பல ஆண்டு காலமாக பளைப் பிரதேசம் இராணுவக் கட்டுப்பகுதியினுள் இருந்தமையால் மொத்த நிலப்பரப்பில் 50 வீதத்திற்கு மேல் இராணுவக் காவலரண் கொண்டதாக காணப்படுகிறது.

இதனால் அப் பகுதியில் மீளக்குடியமர்ந்து தமது வாழ்க்கையைச் சீரமைத்து வரும் மக்கள் கல்வி ,விவசாயம் ,பெருந்தோட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் விரிவுபடுத்தவும் முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

இந்த காவலரண்களை அகற்றி மக்களது வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு ஆவன செய்ய வேண்டுமென கிளிநொச்சியிலிருந்து ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித்திட்டஇணைப்பாளருக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கோரிக்கை விடுத்துள்ளார். (கு)

## அவசர கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமசேவகர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து கிராமசேவகர்களையும் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் சிறினிவாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-108)

## மூடப்பட்ட காயத்திரி பீட ஆண்கள் குருகுலம்

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி திருநெல்வேலியில் இயங்கி வந்த ஸ்ரீ காயத்திரி ஆண்கள் குருகுலம் மூடப்பட்டுள்ளது.

மீசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிசேகம் செய்யப்பட்ட ஸ்ரீ காயத்திரி பீடமும் அதன் பீடாதிபதி சுவாமி ஸ்ரீராஜ்குமார் அவர்களும் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்தே காயத்திரி ஆண்கள் குருகுலம் மூடப்பட்டுள்ளது.

குருகுலம் இயங்கி வந்த வீட்டிற்கு தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த பாதுகாப்பு ஊழியர்கள் பாதுகாப்பை வழங்குகிறார்கள். ஆனாலும் அதே வீதியில் இயங்கி வந்த ஸ்ரீகாயத்திரி பெண்கள் குருகுலம் தற்போதும் இயங்கி வருகின்றது. (ற-36)

# புனிதநகர் வீதியில் மாட்டு எலும்புகள்

(மருதங்கேணி)

கற்கோவளம் புனித நகருக்குச் செல்லும் ஆனைவிழுந்தான் புனிதநகர் வீதி இருமருங்கிலும் மாட்டு எலும்புகள் கொட்டப்படுவதால் புனித நகருக்குச்செல்லும் மக்கள் பெரும் சிரமங்கள் மத்தியில் பயணிக்க வேண்டியுள்ளதாகவும் ஆனைவிழுந்தான் மயானத்திற்குச் செல்லும் மக்களும் பெரும் சிரமங்கள் மத்தியில் தமது கடனைச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புனித நகருக்குச் செல்லும் இவ் வீதி புனித நகர் குடியேற்றம் அரச சார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்படும் நிரந்தர வீடுகளுக்கான பொருட்களைக் கொண்டு செல்லும் வீதியாகும்.

வீதியின் இருமருங்கிலும் மாட்டு எலும்புகளும் கழிவுகளும் கொட்டப்படுவதால் இவ் வீதியால் செல்ல முடியாது உள்ளதாக விசனம் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக பருத்தித்துறைப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென புனிதநகர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-35)

# செய்யும் தொழிலே தெய்வம்

மானிடராகப் பிறந்த எல்லோரும் தத்தம் வாழ்க்கையை ஏதாவது காரியங்கள் செய்வதன மூலமே கழிக்கின்றார்கள். விரும்பியோ, விரும்பாமலோ ஒன்றும்



செய்யாமல் யாரும் இருப்பதில்லை. சும்மா இருப்பவர்கள் என்று சொல்லப்படுவர்களும் மனத்தினாற் சிந்தனை செய்பவர்களாகவே இருப்பர்.

சிலர் உடல் உழைப்பாலும், சிலர் சிந்தனைச் செயற்பாட்டாலும் தொழிற்படுவர்களாயிருப்பர் உடலுழைப்பாயினும், சிந்தனைச் செயற்பாடாயினும் மனம் ஒன்றுபட்டு தாம் எடுத்த காரியத்தில் ''கருமமே கண்ணாயினார். எனும்படி கடமையுணர்வுடன் செயற்படுதலே மேன்மையானதாகும். இப்படியான மேன்மையான கடமையுணர்வு செய்யும் தொழிலே தெய்வம்'' என்ற நிலையை ஏற்படுத்தி விடுகின்றது.

ஒருவரின் நல்ல கடமையுணர்வே அவரது இறைவழி பாடாகவும் கருதப்படுகின்றது. கடமையை மறந்து ஒருவர் எவ்வளவு தான் கடவுளை வழிபாட்டாலும் கடவுளின் கிருபை கிடைக்க மாட்டாது. இறை சிந்தனையுயுடன் கூடிய கடமையுணர்வான அன்பு, இரக்கம், கண்ணியம், கட்டுப்பாடு போன்ற நற்பண்புகளுடன் கூடியதாகவே இருக்கும்.

இதனாற்றான் இறைவழிபாடு உடையவர்கள் செய்யும் கடமையில் மக்கள் நம்பிக்கையும் நன்மதிப்பும் வைத்திருப்பதைக் காணமுடிகின்றது. மக்கள் கடமை உணர்வுடையவராக இருப்பாராயின் அதுவே அவர்கட்கு இறைவழிபாடுமாகும். தம்கடமையிலேயே இறைசிந்தனை உடையவராகத் தம் வாழ்க்கையை அமைத்துவிடுவார்கள். தத்தம் கடமையை மறந்து கடவுளை வழிபடுவதனால் தான் இன்று மக்கள் பெரும்பாலும் துன்பப்படுகின்றனர். இத்துன்பத்திற்கு மனஒருமைப்பாடற்ற வழிபாடும், தத்தம் கடமையை உதாசீனம் செய்து செயற்படுவதுமே

## வெள்ளிநற்சிந்தனை

காரணமாகும்.

இதனை நன்கு உணர்ந்தே நம் முனனோர்களும் ஆன்றோர்களும் எக்காரியத்தையும் தொடங்கும் பொழுது இறைவழிபாடடினை முதன்மைப்படுத்தி உள்ளனர். இறைவழிபாட்டுடன். தெய்வநம்பிக்கையுடன் எதனையும் ஆரம்பிக்கும்பொழுது மனதில் ஒருவித பயபக்தியும், தத்தம் காரியத்தை இடையூறின்றிச் செயற்பட இறையருளே துணை நிற்கும் என்ற நம்பிக்கையும் சேர்ந்து கடமையுணர்வினை ஏற்படுத்திவிடுகின்றது. கடமையுணர்வானது பக்குவமான நிலையை அடைந்தவுடன் கடமையும் இறைவழிபாடும் 'ஒன்றே' எனும் உயர்நிலையை அடைந்துவிடும்.

எனவே, நாம் எமது வாழ்வில் எக்கருமத்தையும் இறைசிந்தனையுடன் ஆரம்பித்து தெய்வநம்பிக்கையுடன் செய்துவருவோமாயின் எமது காரியங்கள் கைகூடுவதுடன் உலகினையும் நல் வழிப்படுத்த முடியுமன்றோ.

நீர்வை மணி


## சிறு விளம்பரம்

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெமராக்கள் எலக்ரோணிக் பிளாஸ்கள் திருத்துதல் உதாரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவற்றின் பாட்ஸ் கையடக்கமாக உள்ள பிளாஸ்டிக் பொருள் உடைவு ஒட்டுதல் போன்றவை விஷேசமாக செய்யப்படும் ரகு போட்டோ டெக்னிக் 301-கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். கன்னாதிட்டி சந்தி சமீபமாக இடம் :மேல் மாடி தொடர்பு சு.நாராயணசாமி.

(9966)


## பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

பளை பிரதேச செயலகத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் வாக்களிப்பு நிலையம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அரச உத்தியோகத்தர்கள் எவரும் பங்குபற்றாது ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பை பகிஸ்கரித்தனர்.

(து)

## திருடனைக் காட்டிக்கொடுத்தது அவனது இரத்தத் தடையம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இருபாலை விதானையார் வீதியில் திருமணமாகி நாலாம் சடங்கு நடைபெற்ற வீட்டினுள் இரவு நேரத்தில் புகுந்த 7 பேர் கொண்ட திருடர் கோஷ்டியொன்று, அவ்வீட்டு உரிமையாளர்களினாலும் பொது மக்களினாலும் விரட்டப்பட்டபோது, ஆறு பேர் தப்பி ஓடி விட ஒருவர் இராணுவ முகாமின் கம்பிவேலிமேல் விழுந்து உட லெல்லாம் இரத்தக் காயத்துடன் தப்பிச்சென்று ஒரு கொட்டிலில் ஒழிந்திருந்தான்.

அவரது உடலிலிருந்து ஒழுகிய இரத்த அடையாளத்தைத் தொடர்ந்து சென்ற பொது மக்கள் அவரைப் பிடித்து கலாசாரம பேணும் குழுவிடம் ஒப்படைத்தனர்.

அவர் தன்னை எதுவும் செய்ய வேண்டாமென்றும் உண்மையைக் கூறுவதாகவும் கூறி திருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் விபரங்களையும் இதுவரை நடாத்திய திருட்டுக்கள் பற்றிய விபரங்களையும் தெரிவித்ததாகவும் அவர் மேல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

(அ)

## குறுகிய அரசியல் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் குறுகிய நோக்குடைய அரசியல் கொள்கைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கம் ஒன்று மாற்றமடைந்து மற்றுமொரு அராசாங்கம் பதவிக்கு வந்தால் அதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கை அனைத்திலும் மாற்றங்கள் கொண்டு வரப்படுவது வழமையாகவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குளியாப்பிட்டியப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த 11 வருடகால எனது ஆட்சியில் கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக ஆரம்பிக்கப் பட்டுள்ள செயற்திட்டங்கள் தொடர்ந்தும் மேற்கெள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

(ற-9)

## இராசிபலன்

11.11.2005
(ஐப்பசி 25, வெள்ளிக்கிழமை)
தசமி பிற்பகல் 2.23 மணிவரை
சதயம் காலை 06.07 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 4.39மணிவரை
இராகுகாலம் 10.36-12.06 மணிவரை
சுபநேரம் 06.06-7.36 மணிவரை
நான்காவது ஐப்பசி வெள்ளி.

| | |
|---|---|
| மேடம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, வேலையில் ஆர்வம், குடும்ப சுகம். |
| இடபம் | பிரபுத்தனம், இஷ்ட சித்தி, ஆரோக்கியம், நன்கொடை. |
| மிதுனம் | உத்தியோக பங்கம், பொருள்சேர்க்கை, பிரயாணம், தேசாந்திரவாசம். |
| கடகம் | மனக்கவலை, எதிர்பாராத பிரச்சினை, காரிய தாமதம், பணவிரயம். |
| சிங்கம் | களஸ்திர நன்மை, தேகநலம், பிரயாண அனுகூலம், காரிய சித்தி. |
| கன்னி | உறவினர் சந்திப்பு, செல்வாக்கு, தொழில் நன்மை, காரிய அனுகூலம். |
| துலாம் | அஜீரண ரோகம், கௌரவக்குறைவு, காரிய இடையூறு, சொத்துப்பிணக்கு. |
| விருச்சிகம் | தன்னம்பிக்கைக்குறைவு, தனவிரயம், காரிய தாமதம், உறவினர் சந்திப்பு. |
| தனுசு | அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், தெய்வசிந்தை, பணவருவாய். |
| மகரம் | மனோ சங்கடம், அதிக செலவு, காரிய தாமதம், கௌரவக்குறைவு. |
| கும்பம் | வெகுமானம், தெய்வ சிந்தை, போசன சுகம், முயற்சி கைகூடும். |
| மீனம் | சுபசெலவு, சயன சுகக்குறைவு, முயற்சி தாமதம், பிரயாணம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## கரவெட்டியில் வைத்தியசாலை அமைப்பதற்கு சுகாதாரத் திணைக்களத்திடம் காணி கையளிப்பு

(மருதங்கேணி)

கரவெட்டியில் பிரதேச வைத்தியசாலையை அமைப்பதற்கென தச்சன் தோப்பு விநாயகர் ஆலய பரிபாலனசபையினர் 12 பரப்பு காணியை சுகாதாரத் திணைக்களத்திடம் கையளித்துள்ளனர். திணைக்களத்தின் சார்பில் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இதனைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கரவெட்டி தச்சை ஐங்கரன் சனசமூகநிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள இக்காணியில் பிரதேச வைத்தியசாலை ஒன்றை அமைக்க கரவெட்டி அரசினர் மத்திய மருந்தகத்தின் அபிவிருத்திசபை அண்மையில் கொடிவாரம் ஒன்றை நடாத்தியது.

இக் கொடிவாரத்தின் போது பெரும் தொகையான பணம் சேகரிக்கப்பட்டது. இந்த மத்திய மருந்தகத்தைப் பிரதேச வைத்தியசாலையாகத் தரம் உயர்த்துவதற்கு சுகாதாரத் திணைக்களம் அனுமதிஅளித்ததைத் தொடர்ந்து இதற்கான பணிகள் வேகமாக நடைபெற்றுவருகின்றன.

இவ் வைத்தியசாலையைக் கட்டிமுடிப்பதற்கு ஏராளமான பணம தேவைப்படுகிறது. ஆகவே, பணமுள்ளோர் வர்த்தகர்கள் இதற்கு உதவ வேண்டுமென அபிவிருத்திச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

(ற-35)

## தற்போது ஜே.வி.பி தலைவர்கள் எனக் கூறுவோர் ரோகணவின் கருத்துக்கு எதிராகவே செயற்படுகின்றனர்

### ரோகணவின் மைத்துனர் பேராசிரியர் சுபாஸ் சந்திரா பெர்னாண்டோ

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் தற்போதைய தலைவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொள்பவர்கள் பொருளைக் கொடுத்து ஏனைய அரசியல் தலைவர்களை விமர்சிப்பதாக ஜே.வி.பி.யின் வன்முறைகள் அற்ற விடுதலை அமைப்பின் தலைவரும், ரோகண விஜேவீரவின் மைத்துணருமான பேராசிரியர் சுபாஸ் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

நான் ரோகணவை எனது 17வயதுக்கு முதல் சந்தித்தேன் 1965ஆம் ஆண்டு முதல் தீவிரமாக ஆலோசித்து 1968ஆம் ஆண்டில் நாம் இருவரும் சேர்ந்து ஜே.வி.பி.யை உருவாக்கினோம். நான் 9 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்ததுடன் அங்கு பல கொடுமையான துன்புறுத்தல்களிற்கும் ஆளானேன்.

தேசியப் பிரச்சினையே இன்று நாட்டின் முக்கிய பிரச்சினையாகும். இதைப் பணக்கார சமூகத்தைச சேர்ந்த தலைவர்களே ஏற்படுத்தினர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க மற்றும் அனுரா பண்டார நாயக்க ஆகியோரும் தாராள வாதத்தில் வந்த வணிக பிற்போக்கு வாதப் பிரதிநிதிகளாகவே உள்ளனர்.

இன்று சோமவன்ஸ அமரசிங்க நாட்டில் இராணுவத்தைக் கலைக்க வேண்டும் என்று கூறுகின்றார். மறுபுறம் விஜேவீரவின் கருத்துகளுக்கு பொய்யான கருத்துக்களைக் கொடுத்து விமல் வீரவன்ஸ ஏனைய தலைவர்களை விமர்சனம் செய்கின்றார்.

இந்த நாட்டில் முக்கியமாகத் தீர்க்கப்பட வேண்டியதாக தேசிய இனப்பிரச்சினை இருக்கின்றது.

எம்மைப் போன்றே தமிழ் மக்களுமம இந்த நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெற்று நிம்மதியாக வாழவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

(ற)

## வீதிகள் எங்கும் நீர்த்தேக்கம்

(மந்துவில்)

முகமாலை-கொடிகாமம் வரையான பிரதான வீதியில் நீர் தேங்கி உள்ளது. பிரதானவீதி இருமருங்கும் வரம்பு போன்று உயரமாக காணப்படுவதால் நீர் வீதியில் தேங்கி உள்ளது. புகையிரதப்பாதை ஓரமாக உள்ள இடங்களில நீர் அதிகம் காணப்படுகிறது.

பல ஆண்டுகாலமாக திருத்தம் இன்றி இருந்து சென்ற ஆண்டு செப்பனிடப்பட்ட வீதியை பாதுகாத்து தமது சிரமங்களை தவிர்க்கும்படி பொதுமக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-102)

## இன்று ஒரு தகவல்

# தீவிர குருபக்தி

ஒரு நாள் ஒரு தந்தை தனது மகனை என்னிடம் அழைத்துக் கொண்டு வந்தார். "சார்... இவன் சரியாகப் படிக்கமாட்டேன் என்கிறான். பெரியவர்களை மதிக்க மாட்டேன் என்கிறான். நீங்கள் சில நாட்கள் இவனுக்குக் குருவாக இருந்து நல்ல விடயங்களைச் சொல்லிக் கொடுத்தால் நல்லது'' என்றார்.

பெரியவர்களையே மதிக்காதவன் எப்படி என்னை மதிக்கப்போகிறான்? யோசித்துப் பார்த்துவிட்டு வேண்டாம்! என்னை விட்டுவிடுங்கள் என்றேன். அவர் என்னை விடமாட்டேன் என்றார். இல்லாவிட்டால் அவரே சிஷ்யனாகி விடுவார் போலிருந்தது. வேறுவழியில்லாமல் அந்தப் பையனை எனது சீடனாக ஏற்றுக்கொண்டேன். குருபக்தி என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தேன் அவனுக்கு.

சதமகர் என்று ஒரு குரு இருந்தார். அவருக்கு ஒரு சீடன். பெயர் துளசி சைதன்யன். நைஷ்டிக பிரம்மச்சாரி! தன்னுடைய குருவுக்கு எந்தநேரத்தில் என்ன தேவையென்பதைப் புரிந்துகொண்டு சேவை செய்பவன். ஆனால் இவனைப் பற்றி மற்ற சீடர்களுக்கு பொறாமை வந்துவிட்டது. இவன் மட்டும் இப்படி இருக்கிறானே என்று. உடனே குருவிடம் போய் அவன் சரியில்லை என்று கோள்மூட்டினார்கள். இருந்தாலும் அந்தக் குரு இதையெல்லாம் நம்பவில்லை. அவருக்குத் தெரியும் யார் யார் எப்படியென்று! துளசி சைதன்யனின் பெருமையை மற்றய சீடர்களுக்கு உணர்த்த வேண்டும் என்று நினைத்தார். அதற்கு ஒரு வழிசெய்தார்.

ஒருநாள் சீடர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு ஒரு காட்டு வழியே போய்க்கொண்டிருந்தார். அங்கே ஒரு பெரிய மலையருவி கொட்டிக் கொண்டிருந்தது. குரு சீடர்களின் பக்கம் திரும்பினார். "இந்த மலையின் மேலிருந்து அந்தப் படுபாதாளத்தில் குதிக்க உங்களில் யார் தயார்?'' என்று கேட்டார். ஒரு சீடனும் வாயைத் திறக்கவில்லை. ஒதுங்கி நின்றுவிட்டார்கள். பின்னால் மூட்டை முடிச்சுக்களோடு வந்து கொண்டிருந்தான் சைதன்யன். அவனைப் பார்த்தார். "நீ மேலேயிருந்து அருவியில் குதி'' என்றார். "அப்படியே செய்கிறேன'' சுவாமி என்று ஓடிப்போய் பொத்தென்று குதித்துவிட்டான்.

அடுத்த கணமே குருநாதர் தனது யோக சக்தியால் பறந்து போய் அவன் கீழே விழுந்துவிடாமல் தாங்கிப்பிடித்துக் கொண்டுவந்துவிட்டார். மற்ற சீடர்களுக்கெல்லாம் ஒரு மாதிரியாகிவிட்டது. அடுத்து இவனை மாட்டிவிடுவதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். ஒருநாள் வெற்றிலை இடிக்கும் சிறிய உரலையும், உலக்கையையும் எடுத்து ஒளித்து வைத்துவிட்டார்கள். சதமகர் சந்நியாசி இல்லை. அவர் வெற்றிலை போடுவார். பற்கள் சரியில்லை அவருக்கு. அதனால் இடித்துத்தான் வெற்றிலை போடவேண்டும்.

திடீரென்று வெற்றிலை பாக்குக் கேட்டால் வழக்கமாக உரலில் இடித்துத் தருவதுதான் துளசியின் பழக்கம். உரலைத் தேடினான். கிடைக்கவில்லை! என்ன செய்வது? குரு கேட்டுவிட்டாரே! குரு சேவைதானே முக்கியம். இவன் என்ன செய்தான் வெற்றிலை பாக்கை தனது வாயில்போட்டு மென்று அதை எடுத்து அவரிடம் கொடுத்துவிட்டான். குரு எதையோ படித்துக்கொண்டே இதை வாங்கி வாயில் போட்டுக் கொண்டார். துளசி இன்று தாம்பூலம் நன்றாக இடிக்கப்பட்டு ருசியாக இருக்கிறது. அதை இடித்த பாத்திரத்தைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. அதை மட்டும் அனுப்பிவை நீ வரவேண்டாம் என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் துளசி தவித்துப் போய்விட்டான். இவன் போகாமல் எப்படி வாயை மட்டும் அனுப்பிவைக்க முடியும்? இவன் தவிப்பதைப் பார்த்ததும் மற்ற சீடர்களுக்கெல்லாம் மனதிற்குள் மிகவும் சந்தோஷம். துளசி கொஞ்சமும் யோசிக்கவில்லை. வாளை எடுத்து தனது தலையை அறுத்து இன்னொரு சீடனிடம் கொடுத்தான். எடுத்துக் கொண்டு போகச் சொன்னான்.

ஏனைய சீடர்கள் தலையைக் கொண்டுபோய் குருவின் முன்பாக வைத்தார்கள். அந்தத் தலையில் வாய் திறந்திருந்தது. வெற்றிலை போட்டு மென்றது தெரிந்துவிட்டது. அவனுடைய குருபக்தியை இப்போது எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். அதன்பின் அந்தக் குரு சதமகர் தன்னுடைய அற்புதத் திறமையினால் அந்தத் தலையை மீண்டும் ஒட்டவைத்துவிட்டார். துளசிக்கு உயிர் வந்துவிட்டது என்று கதையைச் சொல்லி "துளசி சைதன்யனுடைய குருபக்தி எப்படி?'' என்று கேட்டேன் என்னுடன் இருந்தவனிடம்.

"மிகவும் அற்புதம் சார்'' என்றான் அடக்கமாக. நான் உடனே சும்மா விளையாட்டுக்காக அவனிடம் கேட்டேன் "ஏனப்பா உன்னுடைய குருபக்தியை என்னிடம் காட்டுவதற்கு உனது கழுத்தை நீயே அறுக்கவேண்டும் என்று நான் சொன்னால் அதை நீ செய்வாயா?'' என்று கேட்டேன். 'என்னுடைய கழுத்தை நானே அறுக்க வேண்டிய அவசியமில்லை' என்றான் அவன். "ஏன்?'' என்றேன். 'அதே காரியத்தைத் தான் இனி நீங்கள் தினமும் செய்யப் போகிறீர்களே?' என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழ் மக்களுக்கு விரோதமாக என்றும் செயற்படமாட்டேன்

## மகேஸ்வரன் எம்.பியிடம் ரணில் உறுதியளிப்பு





(கொழும்பு)

சிங்கள இனவாதம் பேசி அரசியல் நடத்துவதற்கோ மதவாத அடிப்படையில் அரசியல் செய்வதற்கோ நான் தயார் இல்லை. தமிழ் மக்களுக்கு விரோதமான எத்தகைய செயற்பாட்டுக்கும் ஒருபோதும் நான் இடமளிக்கப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

ஐககிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்று முன்தினம் எதிர்க்கட்சி தலைவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச் சந்திப்பின் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். இச்சந்திப்பின் போது ஐக்கிய தேசியக்கட்சியின் சில எம்.பிக்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள் தொடர்பாக எடுத்துக் கூறிய மகேஸ்வரன் எம்:பி இவ்விடயம் தொடர்பாக தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க,

இன,மதவாதத்தினைப் பேசி அரசியல் நடத்த நான் விரும்பவில்லை. அதற்கான தேவையும் எனக்கில்லை. சிங்கள மக்களிடம் ஒரு கருத்தையும், தமிழ், முஸ்லிம் மக்களிடம் ஒரு கருத்தையும் கூறி அரசியல் நடத்துபவர்கள் இன்றுள்ளனர். இத்தகைய நாடக அரசியலை நான் விரும்பவில்லை.

சகல மக்கள் மத்தியிலும் நான் ஒரே கருத்தையே கூறி வருகின்றேன். தமிழ் மக்கள் மத்தியில் கட்டிக் காத்துவந்த உறவை நான் ஒருபோதும் முறித்துக்கொள்ளமாட்டேன். அரசியல் சுயநலனுக்காக நான் தமிழ் மக்களைப் புறக்கணிக்கத் தயாரில்லை. இதனைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும், தமிழ் மக்களின் பிரச்சினைகளை நான் உணர்ந்துள்ளேன். அவசரகாலச் சட்டத்திற்கு கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக நீங்கள் வாக்களித்த போதும் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உங்களின் மனநிலை எனக்குத் தெரியும். தமிழ் மக்களின் மனவேதனைகள், கஷ்டங்கள் எனக்கு விளங்கும்.எனவே நான் மற்றவர்களைப் போன்று நாடகம் ஆடவில்லை. நான் ஜனாதிபதியானதும் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் உட்பட சகல தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காண்பேன் என்றும் உறுதியளித்துள்ளார். (ற-4)

# இம்மாத இறுதியில் எரிக் இலங்கை வருகை

## விடுதலைப் புலிகளையும் சந்திப்பார்



(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் சமாதானத் தூதுவரும் அந்நாட்டின் அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் இலங்கை வர உத்தேசித்துள்ள இவர் சமாதான முயற்சிக்கான மத்தியஸ்தத்தினைத் தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பாகவும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தும் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கை வரும் இவர் வன்னிக்கும் விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு இந்தியாவுக்கும் செல்லத்திட்டமிட்டுள்ளார். (ற-4,8)

# 2வது வாசிப்புக்காக சமர்ப்பிக்காமையால் பட்ஜெட் சட்டத் தன்மையற்றது -பந்துல

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டதை 2வது வாசிப்பு மற்றும் நிறைவேற்றத்துக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமையினால் அது சட்டத் தன்மையற்றது என ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த வரவு- செலவுத்திட்ட மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரின் 'மஹிந்தவின் சிந்தனை' இதன்மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் பந்துல சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று பிரதான விடயமான விவசாயிகளுக்கான உரமானியம் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் கிடைக்காவிட்டால்-சமுர்த்தி பெறும் ஆயிரக்கணக்கானோருக்கு சமுர்த்தி மானியம் அதிகரிக்கப்படாவிட்டால்- பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவு வழங்காவிட்டால்- 5வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு பால் வழங்கப்படாவிட்டால்- கர்ப்பிணித்தாய்மாருக்கு போசாக்கு கொடுக்கப்படாவிட்டால் - ஊனமுற்றோருக்கு 3000ரூபா கிடைக்காவிட்டால்-பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படாவிட்டால்- மகாபொல புலமைப்பரிசில் தொகை அதிகரிக்கப்படாவிட்டால் இந்த வரவு-செலவுத்திட்டம் கடந்த வரவு-செலவுத் திட்டதைப் போலவே எந்தவொரு மானியமும் அற்றதாக்கப்படும்

இதிலிருந்து 'மஹிந்தவின் சிந்தனைகள்' வரவு-செலவுத்திட்டத்தின் மூலமாக பூரணமாக நிராகரிக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத்திட்டம் எழுத்து மூலம் உள்ளது. மஹிந்தவின் சிந்தனையும் எழுத்து மூலம் உள்ளது. நாம் எதுவும் கூறவேண்டியதில்லை. மக்கள் இவை இரண்டையும் பெற்று ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

இந்த வரவு - செலவுத்திட்டம் கொண்டு வருவது மஹிந்தவின் சிந்தனையை வெளிப்படுத்துவதற்காகவெனக் கூறப்பட்டது. மஹிந்தவின் சிந்தனையை அமுல்படுத்துகின்ற விதம் குறித்து விளக்குவதாக இது அமைகின்றது எனவும் கூறப்பட்டது.

தற்போது மஹிந்தவின் சிந்தனையை இலங்கையில் எழுத, வாசிக்கத் தெரிந்த எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# முஸ்லிம்கள் சொந்த இடங்களில் குடியேற காலம் நெருங்கியுள்ளது

## பிரதமர் மஹிந்த



(கொழும்பு)

வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்கள் மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியேறுவதற்கான காலம் நெருங்கியுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் தமது வீடுகளிலிருந்து, காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு தற்காலிக வீடுகளில் வசிக்கத் தொடங்கி இந்த வருடம் நவம்பர் மாதத்துடன் 15 வருடம் பூர்த்தியாகின்றது.

அவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்கு காலம் நெருங்கியுள்ளது அதற்காக இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# உணவுக் கட்டுப்பாடு இருந்தால்... வயதை வெல்லலாம்

பெரும்பாலான பெண்கள் தங்கள் உடல் தோற்றத்தை நினைத்துக் கவலைப்படுகிறார்கள். எப்படி இருந்தோம்... இப்போ இப்படி ஆகிவிட்டோம்... என்பது அவர்கள கவலை. ஆனால் ஒரு உண்மையை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களின் உடலமைப்பு முற்றிலும் வித்தியாசமானது.

ஒவ்வொரு பெண்ணும் பிறக்கும் போதே கூடுதலான கொழுப்பு செல்களுடன் தான பிறக்கிறார். வளர்சிதை மாற்றம் எனப்படும் மெட்டாபோலிசம் ஆண்களை காட்டிலும் இவர்களுக்கு மெதுவாகவே நடக்கிறது. இதுதவிர ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்டீரான் என வெவ்வேறு விதமான ஹார்மோன்களின் தாக்கமும் இருக்கிறது. இந்தக் காரணங்களால் பெண்களுக்கு ஆயுட்காலம முழுவதும் உடல் எடை அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறத. வயதைப் பொறுத்து உடம்பின் அனைத்துப் பாகங்களும் மாறவிடும். இதனல் தோல் மற்றும் உடல் எடையில் பெரிய வித்தியாசங்கள் உண்டாகும்.

ஆனால் உணவில் அக்கறை காட்டினால் காலத்தை வென்று உடம்பை அழகான தோற்றத்தில் வைக்கலாம். 30 வயதைத் தாண்டிய பெண்கள் கல்சியம், புரோட்டீன் விற்றமின் மற்றும் தனிம சத்துக்களை போதுமான அளவுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இனால் எலும்புகள் வலுவாகும். தோல் பளபளக்கும். வறண்ட சருமம் மாறும். முடிகொட்டுதல் நின்றுவிடும். மொத்தத்தில் நீங்கள் இளமையான தோற்றத்தில் இருப்பீர்கள்.

சரி இந்தச் சத்துக்களால் என்னென்ன நன்மை கிடைக்கிறது என்று விரிவாகப் பார்ப்போம்

*கல்சியம் - பால் செயற்கை வெண்ணெய் மற்றும் பாலாடைக் கட்டி உள்ளிட்ட பண்ணைப் பொருட்களில் நிறைய உள்ளது. இதுதவிர சோயா, பால், சோய பீன்ஸ் அடர்த்தியான பச்சை நிறம் கொண்ட காய்கறிகள், ராகி போன்ற தானியங்கள் ஆகியவற்றிலும் தாராளமாக இருக்கிறது.

◆ விற்றமின் டீ சூரிய ஒளி மூலம் நிறைய கிடைக்கிறது. இந்தச் சத்து தோலுக்கு மிக மிக அவசியம். புகைப்பிடித்தல் மற்றும் மது பழக்கம் இருந்தால் உடனடியாக கைவிடுங்கள். ஏனெனில் இந்த இரண்டும் உடம்பில் இருந்த கல்சியம் சத்தை வடிகட்டிவிடும்.

◆ புரோட்டின் - சோயா மாவு கோதுமை மாவு மற்றும் தானியங்களில் இச்சத்து நிறைய இருக்கிறது.

◆ தானியங்கள் - கோதுமை சப்பாத்த ரொட்டிக்குப் பதில் ராகியைச் சாப்பிடலாம்.



◆ காய்கறிசாறுகள் - தோலை இளமையாகவும் மினுமினுப்பாக வைத்திருக்கும். மேலும் விற்றமின் களையும். தனிம சத்துக்களையும உடலில் சேர்க்கும்.

1.சிவப்பு சாறு - தக்காளி, கரட், பீட்ருட் சாறுகள்

2.பச்சை சாறு - சுரைக்காய், தண்டுச் செடிகள் தினந்தோறும் பிரஷ்ஷாக 2 பழச்சாறுகளைக் குடிக்க வேண்டும் (ஆரஞ்சு, மாதுளை, பப்பாளி மற்றும் ஸ்ட்ராபெர்ரி)

உலர்ந்த பழங்களை 1 பிடி எடுத்துச் சாப்பிடுங்கள்.


தினந்தோறும் 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் குடியுங்கள். கொழுப்பு ,எண்ணெய், நெய் வெண்ணெய் ஆகியவற்றில் ஒரு நாளைக்கு 3 ஸ்பூன் பயன்படுத்தினால் போதும்.

இதையெல்லாம் முறையாகச் சாப்பிட்டு வந்தால் வயதை வெல்ல முடியும். எப்போது 16 வயதுப் பெண் போல் பளிச்சென இருப்பீர்கள.

**குறிப்பு:** எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டு உடற்பயிற்சியை மறந்து விடாதீர்கள். உடற்பயிற்சிகளைத் தினந்தோறும் கட்டாயம் செய்ய வேண்டும். (ற)

# நீண்டகால இருமல்...

நீண்டகால இருமல் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கும் என்று மருத்துவ உலகினர் கூறியுள்ளனர்.



அமெரிக்காவின் மயோகிளினிக் கில் நீண்டகாலம் இருமலால் பாதிக்கப்பட்ட 146 நோயாளிகளை எடுத்துக் கொண்டு அவர்களது பிரச்சினைகள் லிஸ்ட்போடப்பட்டது.

அப்போது சமுதாயத்துடன் இணைந்து பழகுவதில் பிரச்சினை கோபம்- எரிச்சல், தூக்கமின்மை அடிக்கடி மருத்துவரை பார்க்க வேண்டி இருப்பது என பல பிரச்சினைகள் வெளிச்சத்துக்கு வந்தன.

தொடர்ந்து இருமிக்கொண்டிருப்பவர்கள், தங்களது வாழ்க்கைததுணை மற்றும் நண்பர்களால் வெறுக்கப்படுகிறார்கள். இரவில் தூக்கம் பிடிக்காமல் தவிப்பதால், பகல் நேரத்தில் களைப்பு, உடல் பருமன் ஆகிய சிக்கல்களும் உண்டாகின்றன.

நீண்டகாலம் சிகிச்சை எடுத்துக்கொள்வதில் பல நோயாளிகள் எரிச்சல் அடைகிறார்கள். மோசமான இருமலைப் பொறுத்தமட்டில் என்ன காரணம்? என்பதை ஒரே சோதனையில் சொல்லிவிட முடியாது. சிலநேரம் தீவிரமான பரிசோதனைகளுக்குப் பிறகும்கூட பிரச்சினையை கண்டுபிடிக்க முடியாது.

நாட்பட்ட இருமல்காரர்களுக்கு உளவியல் மற்றும் உடலியல் ரீதியான பிரச்சினைகள் அதிகரிப்பதால் மருத்துவமனைக்கும்- வீட்டுக்கும் நடையாய் நடக்க வேண்டி வருகிறது. இத்தகைய காரணங்களால் அவர்களின் வாழ்க்கைத் தரம் குறைந்து போகிறது என்று ஆய்வு முடிவு தெரிவித்துள்ளது. (ற)

# பச்சிளம் குழந்தைகளை அழவைக்கும் வயிற்று வலி

பிறந்த சில வாரங்களே ஆன பச்சிளம் குழந்தைகள்அடிக்கடி வயிற்று வலியால் பாதிக்கப்படுகின்றனர் அழுது அழுது முகம் எல்லாம் சிவந்து போகும். குழந்தையைச் சமாதானப்படுத்த தாயார் என்னதான் முயற்சி செய்தாலும் அழுகை நிற்காது. இதனால் அடுத்து என்ன செய்வது என்று தாய்மார்கள தவிப்புக்கு ஆளாகிறார்கள.


இந்நிலையில் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் அலர்ஜியை உண்டு பண்ணும் உணவுகளைத் தவிர்த்தால் குழந்தைகள் வயிற்று வலியால் துடிப்பது குறையும் என்று ஆய்வு மூலம் தெரிய வந்துள்து.

இந்த ஆய்வில் பிறந்து 6 வாரங்கள் ஆன (வயிற்று வலியுள்ள) குழந்தைகளும் அவர்களின் தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள் 90 பேரும் பற்கேற்றனர்.

முதலில் குழந்தைகளின் அழும் தன்மை, நேரம் தாய்மார்கள் சாப்பிடும உணவு ஆகியவற்றைக் குறித்துக் கொண்டனர். பின்னர் பாதி தாய்மார்கள் முட்டை, பசும்பால், வேர்க்கடலை சோயா, மீன் கோதுமை ஆகியவற்றை உணவில் தவிர்க்குமாறு கூறப்பட்டனர்.

மீதியுள்ள தாய்மார்கள் இந்த உணவுகளை வழக்கம் போல சாப்பிட்டு வருமாறு கூறப்பட்டனர் 10 நாட்கள் கழித்து குழந்தைகளின்வயிற்று வலி எப்படி இருக்கிறது? என்று ஆராயப்பட்டது.

அதில் அலர்ஜியை உண்டு பண்ணும் உணவுகளைத் தவிர்த்த தாய்ப்பாலூட்டும் தாய்மார்களின் குழந்தைகளில் 74 சதவீதம் பேருக்கு அழுகை குறைந்து (25 சதவீதம்) இருந்தது. அதே நேரம் எந்த மாற்றமும் இல்லாமல் உணவுகளைச் சாப்பிட்ட தாய்மார்களின் குழந்தைகளில் 37 சதவீதம் பேருக்கு மட்டுமே இதுபோன்ற பலன் கிடைத்தது.



எனினும் தாய்மார்கள் தாங்களாகவே உணவு முறையில் மாற்றம் செய்யக் கூடாது. எது செய்வதாக இருந்தாலும்மருத்துவரின்அறிவுரையுடனசெயல்படுவதே நல்லது (ற)

# சிரித்த முகம் இருந்தால்... நீண்ட ஆயுள் வாழலாம்!



**வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பது உண்மையோ. அதே அளவுக்கு சிரித்த முகம் இருந்தால் நீண்ட நாள் வாழலாம் என்பதும் உண்மை.ஒருவருக்கு சிரித்த முகம் எப்போது அமையும்? மனதில் எந்த கவலையுமில்லாமல், மன இறுக்கம் இல்லாமல், நிம்மதியாக இருக்கும் போதுதான் முக மலர்ச்சி வரும். மன அழுத்தம் குறையும் போது இருதய இரத்த நாளங்கள் இயல்பாக இருக்கும் திறமையாக செயற்படும். அப்போது தானாகவே ஆரோக்கியம் கைகூடி விடும். முக மலர்ச்சியுடன் இருக்க இதோ சில டிப்ஸ்.**

**1. உங்களைப்பற்றி குறைத்துப் பேசுவதை நிறுத்துங்கள். அதற்குப்பதில் சார்பான விஷயங்களைத் தேடுங்கள்.**

**2. மனைவி அல்லது கணவனுடன் தகராறு வருகிறதா? எரிச்சலூட்டும் சம்பவங்கள் நடக்கிறதா? அப்படியானால் பதிலுக்கு எரிந்து விழாமல் அவர்களை உங்கள் பக்கம் கவர்ந்திழுப்பதில் கவனம் செலுத்துங்கள்.**

**3. நீங்கள் என்ன வேலை பார்த்தாலும் சரி அதில் மகிழ்ச்சியைத் தேடுங்கள். அதனால் திருப்தி தானாகவே கிடைக்கும்.**

# "பட்ஜெட் - 2006" ஒரே பார்வையில்...

(நேற்றைய தொடர்ச்சி...)

### வங்கிகள், நிதி நிறுவனங்களிலிருந்து வட்டி மீது வரிவிதிப்பு

ஏற்கனவேயுள்ள நியதிச் சட்ட ஏற்பாடுகளினால் தங்களின் தேவைப்பாடுகள் மிகவும் சிக்கலானவைகளாக இருப்பதாக நிதித் துறையினால் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே நிதி நிறுவனங்களுக்கு உதவி புரிவதற்கும் அதே நேரத்தில் கடைப்பிடிக்கப்படுவதை மேம்படுத்துவதற்குமாக நான் இந்த முறைமையை பின்வருமாறு திருத்துவதற்கு உத்தேசித்துள்ளேன்.

அ) வைப்பாளர் வட்டியிலிருந்து தமது மொத்த வருமானம் மாதமொன்றிற்கு 9,000 ரூபாவை விஞ்சாமலிருப்பதாக அல்லது ஆண்டொன்றுக்கு 108,000 ரூபாவை விஞ்சாமலிருப்பதாக அல்லது வங்கிக்கிளையிலிருந்து மொத்த வட்டியானது மாதமொன்றுக்கு 1,000 ரூபாவை அல்லது ஆண்டொன்றுக்கு 13,000 ரூபாவை விஞ்சாமலிருப்பதாக பிரகடனமொன்றைச் செய்திருந்தாலன்றி வரிக்கழிவுகள் செய்யப்படமாட்டாது.

**கையடக்கத் தொலைபேசி மீதான வரி நீக்கம்**

ஆ) 10சதவீத வரி வீதத்தில் கழிவு செய்யப்பட்டுள்ள வரி தனிப்பட்டவர்களின் மதிப்பிடத்தக்க வரியின் பகுதியாக அமையமாட்டாது என்பதுடன் வரியானது இறுதி வரியாகக் கருதப்படும்.

### பந்தயம் பிடித்தல், சூதாட்டவரி

சட்ட வினைமுறைப்படுத்தலை கூடுதலான பயனுள்ளதாக ஆக்கும் அரசாங்கத்தின் பொறுப்பிற்கு அமைவாக எனது கடந்த வரவு செலவுத் திட்டத்தில் 80 இற்கும் மேற்பட்ட இயையுள்ள நியதிச்சட்டங்களுக்கு நான் பெரிய மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளேன். இது வினைமுறைப்படுத்தலுக்கு உதவியுள்ளதுடன் மட்டுமன்றி அத்தகைய தவறுகளை இழைத்தவர்களிடமிருந்து 500 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட தொகையையும் பிறப்பித்துள்ளது.

வரிமற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டுக்கோப்பில் உள்ள பல்வேறு குறைபாடுகளின் நிமித்தம் அநேக பந்தயம்பிடித்தல், சூதாட்ட நிறுவனங்கள் இன்னும் கொடுப்பனவு செய்யாமல் நழுவுகின்றன. புதிய பந்தயம் பிடித்தல், சூதாட்ட நிலையங்கள் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரியில்லாத நன்மைகளை கிடைக்காமல் செய்துகொண்டிருக்கின்றன. எனவே அறவீடுகளை பின்வருமாறு சேகரிக்கவுள்ளேன். நேரடி ஒளிபரப்பு நிலையங்கள் ஒவ்வொன்றும் 50,000 ரூபாவையும் செலுத்த வேண்டும். இந்த நடவடிக்கை மூலம் 300 மில்லியன் ரூபாவைக் கொண்ட மேலதிக அரசிறை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### இசைக்கல்வி உதவி

இசைக்கல்விக்கு வசதியளிப்பதன் பொருட்டு இசைக்கருவிகள் மீதான இறக்குமதித் தீர்வை 28 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்படும். கிட்டத்தட்ட 200,000 முச்சக்கரவண்டி இயக்குனர்களுக்கு ஓர் நிவாரண நடவடிக்கையாக முச்சக்கரவண்டிகளில் உபயோகிக்கப்படும் டயர்கள் மீதான இறக்குமதித் தீர்வையானது 28 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்படும். ஏற்றுமதிசார் தொழில் முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதற்காக சில பண்டங்களுக்கு ஏற்புடைத்தான 'செஸ்' வரி வீதங்கள் திருததப்பட்டுள்ளதுடன் இந்த விடயங்கள் தொடர்பிலான இயைபுள்ள வர்த்தமானியும் கூட வெளியிடப்பட்டுள்ளது.

**இசைக்கருவிகள் மீதான இறக்குமதித் தீர்வை குறைப்பு**

### துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடு

2005ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் ஏற்றுமதிகளுக்கான ஓர் ஊக்குவிப்பாக துறைமுக, விமான நிலைய அறவீட்டை 0.25 சதவீத மட்டத்திற்கு குறைப்பதற்கு முன்மொழிந்துள்ளேன். எமது ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு மேலுமொரு ஊக்குவிப்பாக இந்த அறவீட்டை நீக்குவதற்கு இப்போது நான் முன்மொழிகின்றேன.

### கலால் வரிகள்

அற்ககோல், புகையிலை, சட்டவிரோத போதைவஸ்து பொருட்கள் மீதான ஜனாதிபதி சிறப்புப் படையணியினால் கோரப்பட்டுள்ளதன்படி அற்ககோல் மற்றும் புகையிலை மீதான் வரிவிதிப்பு கிரமமாக அதிகரிக்கப்படவேண்டும். என்வே நான் வன்மதுபானம் மீதான கலால் தீர்வையை புரூப் லீற்றரொன்றுக்கு 15 ரூபாவினாலும், மென் மதுபானம் மீதான கலால் தீர்வையை லீற்றரொன்றுக்கு 5 ரூபாவினாலும் அதிகரிததுள்ளேன்.

**அனைத்து வகை கடதாசி மீதான 15 வீத வரி நீக்கம்**

மேலும் சிகரெட்டு மீதான கலால் விசேட ஏற்பாட்டுத் தீர்வையானது சிகரெட்டுககு 50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நான் 2,550 மில்லியன் ரூபாவைக் கொண்ட மொத்த அரசிறை கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன். செல்லிடத் தொலைபேசி மீது நிலவுகின்ற 10 சதவீத கலால் தீர்வையானது ஆதரமான வழங்கலைத் தாக்கி மோசமான தர செல்லிடத் தொலைபேசிகளின் கள்ளக் கடத்தலை ஊக்குவித்துள்ளது. எனவே நான் இத்தீர்வையை நீக்கியுள்ளேன். மோட்டார் சைக்கிள்களுக்கான விசேட கலால் வரியானது தறபோதைய தீர்வைக் கட்டமைப்பில் நிலவுகினற முரண்பாடுகளைத் திருத்துவதற்காக நீக்கப்பட்டுள்ளது. சுதந்திர வர்த்தக ஒழுங்குகளின் கீழ் தகைமையுடையும் உள்நாட்டில் பொருத்தப்பட்ட புதிய மோட்டார் வாகனங்களுக்கு கலால் விசேட தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படும்.

### அரசாங்க சேவையாளர்களின் சம்பளங்கள்

எனது கடந்த வரவு - செலவுத் திட்டததில் அடிப்படைச் சம்பளங்களில் நான் 40 சதவீத அதிகரிப்பை மாதமொன்றுக்கு ஆகக் குறைந்தது 3,250 ரூபாவாகவும், ஆகக் கூடியது 9000 ரூபாவாகவும் வைத்திருப்பதற்கு உடபட்டு நான் முன்மொழிந்துள்ளேன். இதில் 2500 ரூபா அல்லது அதிகரிப்பின் 50 சதவீதம் ஆகியவற்றில் எது கூடுதலானதோ அத்தொகை மட்டுமே வழங்கப்பட்டது. அந்த உரையில் நான் விளக்கப்படுத்தியுள்ளதன்படி எனது எதிர்பார்ப்பானது பெருமளவில் செயல் நோக்கம் துண்டாடப்பட்ட அரசாங்கததுறையானது வரவு- செலவுத் திட்டததில் காண்பிக்கப்படும் செலவிற்கும் மிகவும் கூடுதலாக நன்மைகளைக் கொண்டு வருமென பதே எனது எதிர்பார்பபாகவிருந்தது. இச்சிந்தனைக்கு இசைவாக நிருவாகத்திற்கான தேசிய சபையானது (நி.தெ.ச) இடைக்காலப படிகளை ஒன்றிணைத்து ஓர் புதிய சமபளக்கட்டமைப்பை வகுத்து அரசாஙக சேவையிலுள்ள பணியாளர்களின் ஆகக் குறைந்த சம்பளத்தை மாதமொன்றுக்கு 11,630 ரூபாவில் வைத்துள்ளது. இப்புதிய கட்டமைப்பு நிலவுகின்ற முரண்பாடுகளைத் திருத்துகின்றதுடன் கடந்த வரவு- செலவுத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட சம்பள அளவிலும் பார்க்கக் கூடுதலான அளவினை வழங்குகிறது. மேலும் புதிய கட்டமைப்பிற குள் முரண்பாடுகள் நுழைவதை தடைசெய்வதன் பொருட்டு நிர்வாகத்திற்கான தேசிய சபையானது 1000 ரூபாவைக்கொண்ட வாழ்க்கைச் செலவுப்படி ஒன்று (வா.செ.ப) வழங்கப்படவேண்டுமெனச் சிபாரிசு செய்துள்ளது. இது சம்பளங்களுடன் சேர்க்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டிலும் ஜுன் மாத முடிவிலும் டிசம்பர் மாத முடிவிலும் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் அடிப்படை மீது (வா.செ.சு) சராக்கப்படும். எனினும் இந்த மாற்றம் நிதி ரீதியாக ஒப்பேறக்கூடிய வாய்ப்பு வள நிலையில் நிறைவேற்றப்பட்டு அரசதுறையிலும், ஆயுதப் படைகளிலுள்ள பணியாளர் ஒவ்வொருவருக்கும் நியாயமான வருமானத்தை வழங்கவேண்டிய தேவை உள்ளதன் நிமித்தம் நான் ரூபா 1000 வாழ்க்கைச் செலவுப்படியை வழங்குவதற்கும் தற்போதைய தமது சம்பளத்தின் வேறுபாட்டின் 50 சதவீதத்தினையும் 2006ஆம் ஆணடில நிருவாக தேசிய சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட புதிய சம்பளத்தில் 50 சதவீதத்தை 2007 ஆம் ஆண்டிலும் 2006ஆம் ஆண்டிலான வாழ்க்கைச் செலவுப்படி உள்ளடங்கலாக மாதமொன்றுக்கு 1300 ரூபாவைக் கொண்ட ஆகக் குறைந்த சம்பள அதிகரிப்பதற்கு உட்பட்டு வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். கடந்த ஆணடில் முன்மொழியபபட்ட அதிகரித்த நிலுவைகளுக்காக வரவு- செலவுத் திட்ட மதிப்பீடுகள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டமையினால் இம்முன்மொழிவுகளுக்காக மேலும் ரூ.9600 மில்லியனை நான் வழங்கவேண்டியுள்ளது. அரசாங்க துறை தொழில் ரீதியான வகைப்படுத்தல் ஒழுங்குறுத்திய கூலிக்கட்டமைப்பையும அரசாங்க துறையில் வாழ்க்கை தொழில் அபிவிருத்தித் திட்டமொன்றையும நோககி நகருவதற்காக வகுக்கப்படும்.

**அரச ஊழியர்கள் வாகனங்களை இறக்குமதி செய்ய புதிய திட்டம்**

### விடுமுறை எடுக்காதோருக்கு கொடுப்பனவு

அரச அலுவலர்கள் தற்போது அமைய விடுப்பு 21நாளும், விடுமுறை விடுப்பு 24 நாட்களுமாக ஆணடொன்றுக்கு மொத்தம் 45 நாட்களை விடுப்பாக எடுத்துக்கொள்ள தகைமையுடையவர். ஒவ்வொரு ஆண்டும பயன்படுத்தாத விடுப்புகளில் ஆகககூடியது 30 நாட்களை, அவ்வாண்டின் டிசம்பா 31இல் எடுக்கப்பட்ட சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு காசாக்குவதற்கு அரசாங்க சேவையாளர்களை அனுமதிக்குமாறு நான் முன்மொழிகின்றேன். எனினும், சகல ஊழியர்களும் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக 7 நாட்கள் விடுப்பு எடுக்குமாறு வேண்டப்படுவார்கள். நிருவாகத்துக்கான தேசிய சபையால் விதந்துரைக்கப் படடவாறு நலம், காடு பேணல், வனஜவராசிகள் பாதுகாப்பு மற்றும் புகையிரதப் பகுதி போன்ற இனங்காணப்பட்ட துறைகளில் உள்ள ஊழியர்களின் விசேட வகைகளுக்கான இடநேர்வு காப்புறுதித் திட்டத்தை அறிமுகபபடுத்தவும் நான் முன்மொழிகின்றேன். பொது நிருவாக அமைச்சு நிருவாகத்துக்கான தேசிய சபை மற்றும் திறைசேரியுடனான கலந்தாலோசனையுடன் இந்நன்மைக்கு தகுதி பெறும் துறைகள் மற்றும் தொழில் வகைகளை இனங்காணும்.

### ஓய்வூதியம்

01.01.1997 இற்கு முன்பு ஓய்வுபெற்ற ஓய்வூதியக்காரர்களுக்கு பொது நிருவாக சுற்று நிருபம் இலக்கம் 2/97ஆல் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம பொது நிருவாக சுற்றுநிருப இலக்கம் 06/2004மூலம் வழங்கப்பட்ட நன்மைகளை அவர்களுக்கு நீடிப்பதன் மூலம் ஓயவூதிய முரண்பாடுகள் திருத்தப்படுமென ஓய்வூதியச் சங்கங்கள் எனது கவனத்திற்குக கொண்டுவந்தன. இதை 01.01.2006 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில, இத்திகதிக்கு முன்பான காலப்பகுதிக்கான நிலுவைகளின் கொடுப்பனவுகள் இன்றி நடைமுறைப்படுத்தவும் அதிகரிப்பின் 50 சதவீதம் 2006 ஜனவரியிலும் எஞ்சிய 2007 ஜனவரியிலிருந்தும் வழங்குவதற்கும நான் முன்மொழிகின்றேன்.

மாதமொன்றுககு ரூ.500 கொண்ட நிலையான தளப்பெறுமதியுடன் ஓய்வூதியம் பெறுவோருக்குச் வாழ்க்கைச் செலவுப்படியை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். ஓய்வூதியம பெறுவோருக்குச் செலுத்தப்பட்ட இடைக்காலப் படிகளும் திரட்டபபட இருப்பதுடன் 01.01.2006இலிருந்து மாதமொன்றுக்கு ஆகக்குறைந்தது ரூ.500 ஆகவும், ஆகக்கூடியது ரூ.1,250ஆக இருக்கும் விதத்தில் குறைக்கப்படாத ஓய்வூதியம் மது 10 சதவீத அதிகரிபபு அவர்களுககு வழஙகப்படும். 01.12.2004இற்கும் 31.12.2005 இற்கும் இடையே இவ்விரு நாட்களும் உட்பட ஓய்வுபெற்ற உழியர்கள் இவ் அதிகரிப்பை பெற உரித்துடையவர்களாக மாட்டார்கள். எனவே, ஓய்வூதியம் பெறுவோர் இம்மாற்றங்களில் இருந்து ஆகக் குறைந்த அதிகரிப்பான ரூ.1,000ஐப் பெறுவர். ரூ.4,500 மில்லியன் கொண்ட மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சட்டம் கடந்த ஆண்டில் எனது முன்மொழிவுக்கு விளைவை வழங்குவதற்காக நாடாளுமன்றத்தில வெகுவிரைவில் சமாப்பிக்கப்பட இருக்கிறது. இது விதவைகள் மீண்டும் திருமணம் செய்ய விரும்பினால் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் படிகளை ப பெறுவதற்கு உரித்துடையவர்களாக ஏற்படுத்தப்படுவர். சமுர்த்திக் கொடுப்பனவு 500 ரூபாவிலிருந்து 750 ரூபாவாக அதிகாிக்கும். 2006ஆம் ஆண்டிலிருந்து முத்திரை வரி மீண்டும் அமுல்படுத்தப்படும்.

**விடுமுறை எடுக்காத அரச ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு**

### வரவு செலவுத் திட்ட சுருக்கம்

*பிள்ளைகள், தாய்மார் மற்றும் ஊனமுற்றோருக்கு சிறப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

* பெருந்தொகையான உயர்தொழிலாளர்களும் மற்றும் புதிய தொழிற்றிறன் கொண்டோரும் புதிய ஊக்குவிப்புக் கட்டமைபபு மற்றும் அவ்வாறான அபிவிருத்தி தொடர்பான செலவு ஒதுக்கீட்டின் காரணமாக உலகளாவிய சேவை வழங்குனர்களாக மாறுவார்கள். இது 50,000க்கும் அதிகமான வேலை வாய்ப்புக்களை வழங்க வேணடியுள்ளதோடு அதிகளவிலான வெளிநாட்டு நாணய மாற்றின் உட்பாய்ச்சலையும் உருவாக்க வேண்டும்..

*விவசாயம் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் மென்கலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைச் சேவைகள், சுறறுலா ஆடைக்கைத்தொழில் மற்றும் உளளூர் பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழிலகள் போன்றவற்றுடனான ஒரு ஏற்றுமதி தொழில் முயற்சிப் பொருளாதாரத்தின் தோற்றம் 100,000க்கும் மேலதிகமான வேலைவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தில் சேர்க்கப்பட்ட ஒரு வளர்ச்சி மூலமாக மாறியிருக்கின்றது.

**சுனாமி, யுத்தத்தால் ஊனமுற்ற சிறாருக்கு மாதாந்தம் ரூ.1500 கொடுப்பனவு**

*தகசக் மகவெவ், மாகா நகும, புபுடு வெலஸ்ஸ, ரஜரட்ட நவோதய, மலைநாட்டு அபிவிருத்தி, ஒசு கம்மான விதாத வள நிலையங்கள் நவோதாா பாடசாலை அபிவருத்தி வேலைத்திட்டம், வட-கிழக்கு புனர்வாழவு சுனாமி நிருமாணம் மற்றும் தோட்டச சமூக கட்டமைப்பு போன்றன உறுதியான ஒரு அடிப்படை மீது, ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு அவர்களை வறுமையிலிருந்து நீங்குவதற்கு உதவுவதற்காக அவர்களது ஜீவனோபாயங்களை விருத்தி செய்யும்.

*நெல், பால், பழங்கள், மரக்கறி வகைகளுக்கான சிறந்த உற்பத்தியாளர் விலைகளும் விதைகளுக்கான கடன் ஏற்பாடு, தாங்கக்கூடிய விலைகளில் மற்றும் எமது வவசாய சமூகத்தினர்களுக்கு உதவும் வகையிலான புதிய சந்தை வாய்ப்பு.

*ஆயுதப் படைகள் மற்றும் ஏறக்குறைய 450,000 ஓய்வூதியக்காரர்கள் உட்பட ஏறக்குறைய 850,000 அரசாங்க சேவையாளர்களுக்கு நன்மை வழங்கும் சம்பளம் மற்றும் ஓய்வூதிய அதிகரிப்புக்கள்.

**சமுர்த்திக் கொடுப்பனவு ரூ.750ஆக அதிகரிப்பு**

*கிட்டத்தட்ட 2மில்லியன் சமுர்த்தி நன்மை பெறுபவர்கள் மேலதிக வாழ்க்கைப் படியொன்றினைப் பெறுவர்.

சுருக்கமாக கூறுவதாயின் இந்த நாடாளுமன்றத்தில் முன்னர் என்னால் வைக்கப்பட்ட முன்மொழிவுகள், அலங்கார மீன்களிலிருந்து உயர் தொழில் சேவைகளுக்கான மென்கலங்கள் வரை அனைத்து வழிகளின் ஏற்றுமதிகளில் ஒரு முற்போக்கான பாய்ச்சலை உருவாக்குவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. எமது உட்கட்டமைப்பு உபாயம் உலகளாவிய சந்தைகளுக்கு எம்மை இணைப்பது மட்டுமல்லாமல் அனைத்து மாகாணங்களுக்குள் நமக்கு இடையில் உறுதியான தொடர்பினையும் உருவாக்குவதோடு நமது அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்புக்களை உருவாக்கும் மிகத்திடமான வழியாகவும் இருக்கின்றது. எமது பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அரசிறை நிலைப்பாடுகளை திரட்டுவதோடு ஒரு உறுதியான பொருளாதாரச் சூழலையும் வழங்கும். ஒரு குற்றமற்ற பாதுகாப்பான வாழ்க்கைச் சூழல், அதே போல எமது இயற்கைச் சூழலை பாதுகாப்பதற்கான எமது ஈடுபாடு போன்றன இப்பிராந்தியத்தில் ஒரு உறுதியான ஸ்தானததல் எம்மை நிலைப்படுத்த வேண்டும். மீண்டும மனத்தாங்கல்களை மாத்திரம் வழங்கும பழையவற்றை நோக்காது எதிர்காலத்தை நாம் நம்பிக்கையுடன் நோக்கும் ஒரு நாடாக இருத்தல் வேண்டும்.

இறுதியாக, எமது பொருளாதாரக் கொள்கையின் சாரமானது நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்ற "எமதுஎதிர்காலத்தை உருவாககுதல்- எமது தேசத்தை கட்டியெழுப்புதல" என்ற எமது கொள்கைக் கூற்றுக்கு அமைவாக வறுமை சார்பு, வளர்ச்சி சார்பு, ஏற்றுமதி தொழில் முயற்சியாளர்- நட்புறவு பொருளாதாரங்களை முன்னேற்றுவதாகும் என்பதை நான் மீண்டும் குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். இது அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எமக்கு உதவும் வகையில் எமது பொருளாதாரத்தை 6-8 சதவீதமாக வளர்ச்சியடைய உதவும். அந்தக் காலம்தான் இலங்கையின் அபிவிருத்தி தசாப்தம் என பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என நான் பரிந்துரை செய்கின்றேன். □

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 74

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



இளசுகளின் கனவுக்கன்னியாக வலம் வந்த கதாநாயகியான இவர், தற்போது தெலுங்குச் சினிமா தேசத்திற்கு தாவியுள்ளார். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-


**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 74**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**


குறிப்பு:-
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யபபட்டு பரிசு வழஙகப்படும்.
பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 74

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................
அனுப்புபவரின் முழுப்பெயர் :-..............................
அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 72
சரியான விடை.





இயக்குநர் சங்கர்

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 72இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

முதற் பரிசு :- க.சகுந்தலா
வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

இரண்டாம் பரிசு :- க.மனோகரன்
கைதடி மேற்கு,
நாவற்குழி.

மூன்றாம் பரிசு :- T.S.சயந்தன்
அரசடி ஒழுங்கை,
வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:**
வே.குமாரசுவாமி, கரவெட்டி. வ.சஞ்சீவன், சுன்னாகம், த.அரவிந்தன், கோண்டாவில். P.S.ராணி, வட்டுக்கோட்டை. L.கீர்த்திகா, உடுப்பிட்டி. வி.நந்துஜா, கொக்குவில். சொ.நித்தியா, யாழ்ப்பாணம். வ.சுதர்சன், நாவலர் வீதி. வி.இளங்கோ, கோப்பாய்.

### பிறவி இதயக்கோளாறா?

சிலருக்குப் பிறவியிலேயே இதய அடைப்பும் கருநிலையிலேயே இதயக்கோளறு பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதுண்டு.

தாயின் உயிரமைப்பில் கடுமையான விற்றமின் பற்றாக்குறை. கர்ப்பத்தின் தொடக்ககாலத்தில் ஏற்படும் சில வைரஸ் தொற்று நோய்கள் சாராய போதை நிலையில் கருத்தரித்தல் கதிரியக்க வீச்சினால் பாதிக்கப்படுதல் போன்ற பல்வேறு சூழ்நிலைகள் இந்த நோய் ஏற்பட காரணமாக அமைந்து விடுவதுண்டு.

பொதுவாக பிறவி இதய அடைப்பு கோளாறு சாதாரணமாக தனியாக ஏற்படாமல் வேறு எதனுடனாவது இணைந்தே பெரும்பாலும் வருகிறது சயோனோசிசுடனும் திசுக்களுக்குப் பிராணவாயு கிடைப்பது தடைப்பட்டுவிடும் போது குழந்தைகளின் வளர்ச்சியில் குறை ஏற்பட நேரிடலாம். சில நேரங்களில் குழந்தைகளின் உடல் வளர்ச்சியுடன் மன வளர்ச்சியும் பாதிக்கப்படக்கூடும். அறுவை சிகிச்சையினால் மட்டுமே இந்தப் பாதிப்புக்குத் தீர்வு காண முடியும்.

### வறண்ட கண்களா? மீன் சாப்பிடுங்கள்

சில பெண்களுக்குக் கண்கள் வறண்டு காணப்படும். இதற்கு Dry eye Syndrome என்று ... பர் கண்ணீர் சுரப்பிகள் போதியளவுக்கு வேலை செய்யாமல் இருந்தாலோ ஈரப்பதம் இல்லாவிட்டாலோ இப்பிரச்சினை ஏற்படும்.

இதற்குக் கண்ணீரை செயற்கையாக வரவழைக்கும் பொருட்கள் ஓரளவுக்கு உதவியாக இருக்கும். இருப்பினும் அது தற்காலிக தீர்வாக மட்டுமே அமையும்.

இந்நிலையில் ஒமேகா - 3 அமிலச் சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிடும் பெண்களுக்கு மேற்படி சிக்கல் குறையும் என்று பிரிஹாம் என்ற ஆராச்சியாளர் கூறியுள்ளாா. ஒமேகா -3 அமிலச் சத்து மீன்களில் தான் அதிகமாக உள்ளது. இதனால் மீன் உணவுகளை அதிகமாக சாப்பிடும் பெண்களுக்குச் சிக்கல் குறையும்.

சிலர் சைவ உணவுகளை மட்டுமே சாப்பிடுவர். இத்தகைய பெண்களும் ஒமேகா -3 அமிலத்தைப் பெற முடியும். ஆம் பூசணிக்காய் விதை சோயா பீன்ஸ் மற்றும் கனோலா ஒயில் ஆகியவற்றிலும் இந்தச் சத்து தாராளமாகவுள்ளது.


பனாமா கால்வாய் தோண்டப்படும் பேது கிட்டத்தட்ட 25,000 பேர் உயிரிழந்துள்ளனர். எப்படித் தெரியுமா?

மலேரியாவினால் கிட்டத் தட்ட 20 ஆயிரம் பேரும் மீதமுள்ளவர்கள் விஷக் காய்ச்சலினா லும் இறந்துள்ளனர்.

* * *

சீனாவில் ஒரு பகுதியில் வாழும் மக்களின் பெரும்பாலானோரின் முக்கிய உணவு சிறுபுழு மற்றும் பூச்சியினங்கள். அதிலும் அவர்கள் புழு, தேள் மற்றும் வெட்டுக்கிளியை விரும்பிச் சாப்பிடுகிறார்கள்.

## 75 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த முதல் தம்பதியினர்



'இன்றைய விஞ்ஞானம் மற்றும் மருத்துவ வளர்ச்சியினால் மனிதர்களின் ஆயுட்காலம் கூடிக் கொண்டே இருக்கிறது. பலர், நூறு வயதைக் கடந்து வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு தம்பதியினர் 50 அல்லது 60 ஆண்டுகாலம் திருமணமாகி இணைந்து வாழ்ந்திருப்பார்கள். கணவன் - மனைவியில் யாராவது ஒருவர் இந்த கால கட்டங்களில் மரணமடைந்திருக்கக் கூடும்.


ஆனால் அமெரிக்கத் தம்பதியினர் ஒரு ஜோடி திருமணமாகி சுமார் 75 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த முதல் ஜோடி என்ற பெருமையைப் பெற்று சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஹெர்பாட் பிரவுனுக்கும் மேக்டா பிரிஸ் என்ற பெண்ணுக்கும் கடந்த 1930ஆம் ஆண்டு 19ஆம் திகதி திருமணம் நடந்தது. இதுவரை இவர்கள் இணைபிரியாமல் தங்கள் இல்லற வாழ்க்கையை இனிதே நடத்தி வருகின்றனர்.

தற்போது ஹெர்பர்ட்டுக்கு 105 வயதாகிறது. மேக்டாவுக்கு 100 வயது ஆகிறது.

காலையில் திருமணம் செய்து கொண்டு மாலையில் விவாகரத்துச் செய்துகொள்ளும் சில அமெரிக்கர்கள் மத்தியில் ஹெர்பர்ட் - மேக்டா தம்பதிகளின் திருமண வாழ்க்கை ஒரு சாதனை தானே!

# குறுக்கெழுத்துப் போட்டி இல-78



*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 78**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
..............................

இங்கே வெட்டுக ------------------------------

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)ஒரு காதல் ஜோடியின் கதாநாயகன். (4)யானையைக் கட்டி வைக்க இதனை பயன்படுத்துவர் (திரும்பியுள்ளது). (6)கணிததததில் ஒரு அளவீட்டு முறை (திரும்பி வருகிறது). (8)கைநிறைய வாரி கொடுப்பவர்களை இப்படி அழைப்பர். (திரும்பி வருகிறது). (11)சமையலுக்கு உதவும் (திரும்பி வருகிறது). (12)ஒரு ஆயுதம்.

### மேலிருந்து கீழ்

(1)இராமனின் கால் பட்டதால் இவள் உயிர்பெற்றாளாம். (2)ஒரு நோய். (3)வாரத்தில் ஒருநாள். (5)வானத்தில் தெண்படும் (குழம்பி வருகிறது). (8)தற்காப்பு கலைகளில் ஒன்று மிகவும் பழமையானது. (9)மன்னர்கால அஞ்சல் முறை. (10)ஆபரண முத்து வகையைச் சேர்ந்தது (கீ.மே). (11)பயம் (கீ.மே).

### குறுக்கெழுத்துப் போட்டி இல - 76 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.யாக்கை 3.கூத்து 5.வேடர் 6.திவலை 7.மப்பு 8.சாவு 11.மிலேச்சன் 12.யாழ்.

### மேலிருந்து கீழ்

1.யாத்திரை 2.கைவேலை 3.கூர் 4.துப்பரவு 8தமிழ் 9.பச்சை 10.சான்று.

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

முதற் பரிசு :- த.தனஞ்சயன்
சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

இரண்டாம் பரிசு :- க.திலகவதி
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

மூன்றாம் பரிசு :- த.யோகராசா
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**
ஏ.கபீர்த்தன், அரியாலை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. ப.சிவசூரியர், சங்கானை. தி.மயூரகிரிசர்மா, நீர்வேலி. பா.செல்வராணி, சங்கானை. சங்கீதா+ சம்பூரணி, வட்டுக்கோட்டை. செ.இராசதேவி, கோப்பாய். வ.மன்னர் அன்ரனி, குருநகர். க.புஸ்பராணி, பருத்தித்துறை.


எவனொருவன் யோசித்து பின் அழகான மிதமான வார்த்தைகளைப் பேசுகிறானோ அவனே பெரியோர்களின் மதிப்பைப் பெறுகிறான். *மகாவீரர்.*

* * *

கோபிக்கத் தெரியாதவன் முட்டாள். கோபிக்க விரும்பாதவன் விவேகி. *ஆங்கிலப் பழமொழி*

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

(71)



ஒரு மாட்டு வண்டியில் என்னை ஏற்றி அவர் வண்டியுடன் ஒரு மைல் நடந்துவந்து திண்டிவனம் சாலையில் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார். விரிவுரை கேட்க காஞ்சீபுரத்திலிருந்து வந்திருந்த மூன்று அன்பர்கள் என்னுடன் இருந்தார்கள். நான் நடுச்சாலையில் நின்று பஸ்ஸை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இரண்டு பஸ்ஸில் இடமில்லை என்று கை அசைத்துக்கொண்டு போய்விட்டன.

எனக்கு அன்றுமாலை திண்டிவனத்திலிருந்து 16மைல் தொலைவிலுள்ள வடகோட்டிப்பாக்கத்தில் விரிவுரை. அவர்களைத் திண்டிவனம் ரயிலடிக்குக் கார் கொண்டுவந்து வைத்திருக்குமாறு எழுதியிருந்தேன்.

பகல் 12 மணி ஆயிற்று. என் உடன் இருந்தவர்கள் "சாமி! இங்கிருந்து வந்தவாசி 2 மைல்தான். வந்தவாசிக்குப் போகும் பஸ்ஸில் வந்தவாசிக்குப்போய் பஸ்ஸ்டாண்டிலிருந்தே நீங்கள் திண்டிவனம் போவது சுலபம்'' என்றார்கள். அவர்கள் வார்த்தைக்கிணங்கி அவர்களுடன் வந்தவாசிக்குச் சென்றேன்.

என் உடன் வந்தவர்கள் "சுவாமி! இந்த ஹோட்டலில் நீங்கள் சாப்பிட்டுக் கொண்டிருங்கள். நாங்கள் பஸ் ஸ்டாண்டிற்குச் சென்று டிக்கட்டு எடுத்து இடம் ஒதுக்கிக் கொண்டு வருகிறோம்'' என்று சொன்னார்கள். நான் ஹோட்டலில் குழம்பு சோறு சாப்பிட்டுவிட்டு ரஸம் சோறு சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அந்த நேரம் பஸ் வந்துவிட்டது. நான் பாதி உணவிலேயே எழுந்து கையலம்பிக்கொண்டு பஸ் ஏறிப் புறப்பட்டேன் பொன்னூரில் விரிவுரைக்கு ஏற்பாடு செய்தவர்கள் எனக்கு உதவி செய்தார்களில்லை. திண்டிவனம் போய்ச்சேர்ந்தேன். வடகோட்டிப்பாக்கத்து அன்பர்கள் அங்கு காருடன் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னைப் பார்த்து "சுவாமி! தாங்கள் 'நடுரோட்டில் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டு நின்று கொண்டுருந்தீர்கள்' என்று பஸ்ஸில் வந்தவர்கள் சொன்னார்கள். ஏன் சுவாமி இப்படி அவதிப்படுகிறீர்கள். நீங்கள் எங்களுக்குக் கட்டளையிட்டிருந்தால் நாங்கள் பொன்னூருக்கே கார்கொண்டு வந்து தங்களைச் சுகமாக் அழைத்துக் கொண்டு போயிருப்போமே'' என்று பரிவுடன் பகர்ந்தார்கள்.

அன்று முதல் என்னுடைய திட்டத்தில் ஒரு மாறுதல் செய்து கொண்டேன், "நாம் பொருள் வாங்காமல் விரிவுரை செய்வதனால் நம்மை அழைக்கின்றவர்கள் நம்மைச் சரியாக நடத்தாமலும் வீண் செலவு செய்தும் நம்மை அவல நிலையில் விடுகிறார்கள். இன்றுமுதல் நம்மை அழைப்பவர்களிடம் நாமே பொருளை வாங்கி நாம் எடுத்துக்கொள்ளாமல் அறப்பணிகளுக்குத் தரவேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். இந்த முடிவினால் பல நற்பணிகள் செய்ய வாய்ப்பு ஏற்பட்டது.

### நான் எழுதிய நூல்கள்

என்னுடைய தந்தையாருடைய கட்டளையின்படி காங்கேய நல்லூர்த் தலபுராணம் செய்யுள் வடிவாக இயற்றினேன். அது இன்னும் அச்சாகவில்லை. என்னுடைய தந்தை யார் வியாசபாரதத்தைத் தமிழில் செய்யுள் வடிவாகச் செய்யவேண்டுமென்று பலகாலும் என்னிடம் கூறி வற்புறுத்தினார். அவருடைய கட்டளையை மறுக்க அஞ்சி பாரத்தைச் செய்யுள் வடிவாகப் பாடத் தொடங்கினேன். அப்பொழுது எனக்கு வயது 24 அல்லது 25 இருக்கும். அதிக வேலைகள் இல்லாத காலம் அவ்வாறு நான் பாடிக்கொண்டிருந்த பொழுது கும்பகோணம் மகாமகோபாத்யாய திரு.மா.வீராமானு ஜாசாரியார் என்னைக் கண்டு ஆசி கூறினார். ஆதிபர்வம் மட்டும் 500 செய்யுட்களில் பாடி முடிந்தேன். அதற்குப் பின் எனக்குப் பலப்பல பணிகளின் சுமை மிகுந்தன. அதலால் பாரதம் பாடும் பணி எனக்கு அத்துடன் நின்றுவிட்டது.

தந்தையாருடைய கட்டளைப்படி முருகம்மையார் புராணத்தைச் செய்யுள் வடிவாகப் பாடினேன். மீளவும் தந்தையார் பணித்தவாறு நளாயணி என்ற வரலாற்றைச் செய்யுள் வடிவாகப் பாடினேன். திருப்புகழுக்கு விரிவுரை எழுதத்தொடங்கி ஆறுபடை வீட்டுத் திருப்புகழ்களுக்கும், பஞ்ச பூதத் த்லங்களின் திருப்புகழ்களுக்கும் உரை எழுதி முடித்தேன். இவைகள் 9வால் யூம்களாக அச்சிட்டு வெளிவந்தன. கந்தரனுபூதி, கந்தரலங்காரம் என்ற இரு நூல்களுக்கும் உரை எழுதி அச்சிட்டு வெளியாயின.

அடியிற்கண்ட நூல்கள் என்னால் எழுதப்பட்டவை. "திருப்புகழமிர்தம்'' (மாத இதழ்) மணிமொழிகள், அபிராமி, பவனேந்திரி, விநாயகர், முருகன், கந்தவேள் கருணை, சிவனருட்செல்வர், பிள்ளையார் பெருமை, கண்ணன் கனியமுதம், கற்புக்கனிகள் (9 பாகங்கள்), திருநீற்றின் தெய்வநலம், மகாபாரத வசனம், குழவியும் கிழவியும், தியாகம், சிந்தனைத்தேன், அறிவுரை அமுது, செந்தமிழ் இன்பம், தேன்விருந்து, வாழும் வழி, வாரியார் வாக்கு, வினாவிடை, கந்தன் கருணை, திருமயிலைத் திருப்புகழ் உரை, சிவ்புராண உரை, சத்தியஞானசபை தூபி, நீராட்டு நினைவுமலர், திருவாசகத்தேன், வட நாட்டு யாத்திரை, இமாலய யாத்திரை, கம்பன் கவிமணிகள் மலேயா மாட்டிசியும் ...அமர் நாத்காக்ஷியும், இராமாயணம் (வசனம்) கந்தரனுபூதி உரை, கந்தரலங்கார உரை, நேபாள யாத்திரை, வாரியார் விருந்து, மங்கல மங்கையர், வாரியார் விரிவுரை விருந்து, பெண்குலப் பெருமை, வாரியார் வழங்கும் மனைவாழ்வு, கட்டுரைக் கனிகள், பைந்தமிழ்ப் பாமாலை, அறநெறி லண்டனில் முருகன், மருதமலை முருகன் (போற்றி 1008), மாதர் மணிகள், பழநிமலைப் பரமன்.

### மறைஞான சிவம்

என்னுடைய தமையனார் மதுசூதனசிவம் சிறந்த பண்பாடு உடையவர். ஜோதிடக் கலையில் வல்லவர். 1954இல் சந்நியாசம் பெற்றுக்கொண்டார். காங்கேயநல்லூரில் அவருக்குத் தனியே ஒரு ஆசிரமம் அமைத்துக் கொடுத்தேன். இவருக்கு தீச்சாநாமம் "மறை ஞான சிவம்''.

வள்ளிமலையில் இராஜகோபுரத் திருப்பணியை அருகிலிருந்து செய்து முடித்தார். காங்கேயநல்லூரில் முருகப் பெருமானுக்கு வைரமகுடம், மணிமுடி, ரத்னஹஸ்தம், ரத்னபாதம், மார், பதக்கங்கள் முதலிய திருவாபரணங்கள் ஆசிரமத்திலேயே ஆசாரியை வைத்துக்கொண்டு, தான் அருகில் இருந்து கண்ணுங் கருத்துமாகச் சுமார் 2 லட்ச ரூபாய் செலவில் செய்துவைத்தார்.

வயலூர் திருப்பணியை வயலூரிலேயே இருந்து செம்மையான முறையில் செய்து முடித்தார். வள்ளிமலையில் சரவணப் பொய்கைத் திருப்பணியில் ஈடுபட்டு அருகிலிருந்து செய்துகொண்டிருந்தார். 9-2-73.ல் மகாசமாதி அடைந்தார். தந்தையாருடைய சமாதிக்கருகில் இவடைய சமாதிக் கோயில் அமைத்து, அதில் விநாயகர் பிரதிஷ்டை செய்து, அதில் நித்திய வழிபாடு நடைபெற ஏற்பாடு செய்திருக்கிறேன்.

### பவளவிழா

கோவை மாநகரில் தடாகம்ரோடு பால தண்டாயுதபாணி திருக்கோயில் திருப்பணிக்கு இருமுறை தொடர் விரிவுரை செய்து பலரிடம் அணுகி வசூலித்து மார்பிள் ஸ்டோனில் (பளிங்குக்கல்) கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்வித்தேன். (தொடரும்)

## ஐ.தே.க விளம்பர ஒளிபரப்புக்கு தடைவிதிக்க நீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விளம்பரத்தை 3 தனியார் தொலைக் காட்சிகள் ஒளிபரப்பத் தடைவிதிக்க கொழும்பு நீதிமன்றம் மறுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய பால்மா விளம்பரம் தொடர்பில் இந்த வழக்கை கெரகெலவின் தயனை சந்திரலாத என்பவர் தொடர்ந்திருந்தார்.

தவறான வாக்குறுதி கொடுத்து தமது மகளை ஐ.தே.க.விளம்பரத்தில் நடிக்க வைத்ததாகவும் அதற்காக தமக்கு ரூ.100 மில்லியன் நட்டஈடு அளிக்க வேண்டும் என்று சந்திரலாத கோரியிருந்தார்.

இந்த வழக்கிற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறி விளம்பரத்துக்கு தடைவிதிக்க நீதிபதி சுமித்ரபால மறுத்துவிட்டார். (ற)

## பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரம் 6% வளர்ச்சி

(கொழும்பு)

பலதரபபட்ட நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் நாடு ஏறத்தாழ ஆறு வீதமான பொருளாதார வளர்ச்சியினைக் கண்டுள்ளது. இந்த ஆண்டின் வருமானம் ஏறத்தாழ 1200 அமெரிக்க டொலர்களை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்தின் முதலாவது வாசிப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1000அமெரிக்க டொலர் என்ற எல்லையினைத் தாண்டி நாடு மததிய தர வருமானத்தினைக் கொண்ட நாடு என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இது 2004ஆம் ஆண்டு 5.4 வளர்ச்சியைக் கண்டிருந்தது. இந்த ஆண்டில் தேசிய பொருளாதாரத்தில் ஏறததாழ 6 சதவீத வளர்ச்சியை நோக்கி நாடு முன்னேறியுள்ளது.

இந்த ஆண்டில் தலைக்குரிய வருமானம் 1200 அமெரிகக டொலர்களை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த ஆண்டில் பணவீக்கத்தை 8 சத வீதத்திற்கு குறைப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. கொழும்பு, மாத்தறை ரயில் சேவையை நவீனப்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்துடன் தற்போது பேச்சுக்களை நடத்திவருகின்றோம்.

மேலும், போக்குவரத்துத் துறையை அதி நவீனப்படுத்த உதவிவழங்கும் நாடுகளின் உதவிகளை எதிர்பார்த்திருக்கின்றோம். அத்தோடு கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிப்படைந்த வலயங்களின் அபிவிருத்திகளை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## சுவாமி சித்ரூபானந்தா உரை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பவளவிழாக் கண்ணோட்டம்பற்றி சுவாமி சித்ரூபானந்த இன்று நண்பகல் 12மணிக்கு உரை நிகழ்த்தவுள்ளார்.

வேம்படி மகளிர் உயாதரப் பாடசாலையில், அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் போது ராமகிருஷ்ணர், அன்னை விவேகானந்தர் ஆகியோரது அழகிய படங்கள் மாணவர்களுக்கு வழக்கப்படவுள்ளன. (அ)

## ஏழாலையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் பெண்களுடையவை?



(யாழ்ப்பாணம்)

ஏழாலை மத்திய மகாவித்தியாலயத்திற்கு அண்மையாக உள்ள இராணுவ காவலரண் அமைந்திருந்த காணிக்குள் இருந்து இரண்டு எலும்புக் கூடுகள் காணி உரிமையாளரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

நீண்ட நாட்கள் படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்த காணியிலிருந்தே இந்த மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறித்த காணியிலிருந்து படையினர் அண்மையில் வெளியிறிய நிலையில் [illegible]தனைத் துப்புரவுசெய்து கொண்டிருந்த அதன் உரிமையாளர் [illegible]ந்த எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்துள்ளார்.

இவை இரண்டு பெண்களுடைய எலும்புக் கூடுகளாக இருக்கலாம் என [illegible] எலும்புக்கூடுகளுடன் இருந்த உடுதுணிகள் மூலம் சந்தேகிககப்படுகிறது. (ற)

# மனிதாபிமானத்திற்கு இருப்பதில்லை மதமும் மொழியும்

கிழக்கு லண்டனில் இருந்து வந்த அந்த இரண்டு வெளிநாட்டுப் பெண்மணிகளும் சில நாட்கள் முன்னர் கிக்கடுவ பகுதியில் தர்ஷனா என்ற இளம் சுழியோடி ஒருவரின் பெயரைக் கேட்டு அந்த சர்வதேச சுழியோடும் நிலையத்திற்கு முற்றுகையிட்டபோது அங்கிருந்த பலருக்கும் அது வியப்பான ஒரு விடயமாகத் தான் இருந்தது.

''அட நம்ம தர்ஷனாவை தேடி வெள்ளைக்கார பொம்பளைங்க வந்திருக்காங்களே...'' என்ற அவர்களின் இந்த வியப்பிற்குப் பின்னால் ஒரு மனிதநேயம்மிக்க கதை இருக்கின்றது.

'சுசி டேவிஷன்', 'லெஸ்லி வூட்' இரண்டு பேரும்தான் அந்த வெளிநாட்டுப் பெண்மணிகள். லண்டனில் ஆசிரியராகப் பணியாற்றும் இவ்விரு பெண்மணிகளும் கிக்கடுவ வந்து தர்ஷனாவைத் தேடியதற்குக் காரணம் சுனாமி நேரத்தில் அவர்களுக்கு தர்ஷனா செய்த மிகப்பெரிய உதவி ஒன்றுதான்.

தங்கள் சுற்றுலாவை கழிப்பதற்காக கிக்கடுவயில் உள்ள உல்லாசப் பயணிகள் விடுதி ஒன்றில் கடந்த வருடம் டிசம்பர் மாதமளவில் தங்கியிருந்தார்கள் இவ்விரண்டு ஆசிரியப் பெண்மணிகளும். சுனாமி நடைபெற்ற அந்த அதிகாலைப்பொழுதில் காலிக்கு புறப்படுவதற்காக தயாராக இருந்தனர் இருவரும். அப்போது லெஸ்லி தன் அறைக்குள் இருந்த குளியலறையில் குளித்துக்கொண்டிருந்தார். சுசியோ விடுதியின் பின்பக்கத்தில் இருந்தார். திடீரென்று மக்களின் கூக்குரல் கேட்டு எல்லோரும் கரையை நோக்கி ஓடி வரும் சப்தம் கேட்டதும் சுசி ஓடிவந்து லெஸ்லியை குளியலறையிலிருந்து வெளியே வருமாறு கத்தியிருக்கின்றார். அதனைத் தொடர்ந்து தன் அறைக்குள் தன் உடைமைகளை எடுப்பதற்காக ஓடிய சுசியால் அவரது அறைக் கதவைத் திறந்து திரும்பி வர முடியவில்லை. அதிகூடிய தண்ணீரின் அழுத்தம் காரணமாக அறைக்கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருந்தன. கதவைத் திறக்கும் முயற்சியில் சுசி கடுமையாகப் போராடிக்கொண்டிருந்த வேளை திடீரென்று கதவு வேகமாகத் தானாகத் திறக்க அந்த வேகத்தில் சுசி வெள்ளத்தால் வீதிக்கு அடித்துச்செல்லப்பட்டார்.

ரயில்வே பாதைக்கு பக்கமாக வேகமாக அவரை அடித்துச் சென்ற பேரலை ஒரு மரக்கிளைக்கிடையே அவரை அப்படியே நிறுத்தி விட்டது.

அந்த நேரத்தில்தான் தெய்வச் செயலாக கிக்கிடுவவில் உள்ள சுழியோடற் பயிற்சிப் பாடசாலையின் உதவி பயிற்சியாளராகத் தர்ஷனா முதலாவது அலையின் தாக்கத்திலிருந்து பலரையும் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். காலி வீதியில் அவர் சென்று கொண்டிருந்தபோது தான் மரத்தின் கிளையொன்றில் தொங்கிக் கொண்டிருந்த வெளிநாட்டவர் ஒருத்தரைப் பார்த்திருக்கிறார். உடனே உதவிக்கு ஓடி அவரை தர்ஷனா காப்பாற்றியதும் அவரைப் பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தியிருக்கிறார். அப்பேதுதான் தன் தோழியான லெஸ்லி பற்றி கண்ணீர் மல்கச் சொல்லியிருக்கிறார். உடனே தர்ஷனா அவரைத் தேடிப் போனபோது ஒரு வாகனத்திற்கும் சுவரிற்கும் இடையில் ஆடையில்லாமல் கண்டுபிடிக்கப்பட்டார். ஆடையில்லாமல் வெளியே வருவதற்கு லெஸ்லி வெட்கப்பட்ட போது தர்ஷனா உடனடியாகத் தனது காற்சட்டையைக் கழற்றி அவருக்குக் கொடுத்து அவரைக் காப்பாற்றியது லெஸ்லியின் கண்களைக் குளமாக்கியது.

அன்று மாலை மறுபடியும் இரண்டாவது இராட்சத அலை வந்தபோது தர்ஷனா கிக்கடுவவில் இருந்து சற்று உள்ளே உள்ள ''பனன் கொட என்னும் ஊரிற்கு'' உள்நாட்டு மக்களும் வெளிநாட்டவரும் பாதுகாப்பாக சேர்ந்திருக்கிறார்களா என்பதைப் பார்ப்பதற்காக சென்றிருக்கிறார்.

ஆனால் தன் மகன் தர்ஷனாவைக் காணவில்லை என்றதும் பதறிப்போன அவரின் பெற்றோர்கள் அவரைத் தேட ஆரம்பித்துள்ளனர். தன் வீட்டிற்குப்பேன தர்ஷனாவிற்கு பெரிய ஆச்சரியம். காரணம் அவரால் காப்பாற்றப்பட்ட லெஸ்லி அங்கிருந்ததுதான் தர்ஷனா தன்னுடைய ஜீன்ஸ் பொக்கட்டிற்குள் அவரின் சுழியோடற் பயிற்சிப் பாடசாலைக்குரிய சாவி ஒன்றை வைத்திருந்தார். அதன்பின் தர்ஷனாவும் அவர்கள் பெற்றோரும் லெஸ்லிக்கும் அவரோடு பாதுகாப்பைத் தேடி வந்த மற்றைய வெளிநாட்டாளருக்கும் மூன்று நாட்கள் உணவு கொடுத்து உபசரித்தார்கள்.

இந்த இரண்டு ஆசிரியைகளும் தங்களுடைய எல்லா உடமைகளையும் இழந்து விட்டிருந்தாலும் சுசி தன்னுடைய பயணப் பையை எப்படியோ பத்திரமாக வைத்திருந்த படியால் மூன்று நாட்களின் பின் அவர்களால் இங்கிலாந்திற்குச் செல்ல முடிந்தது.

இத்தனை நாட்கள் கழிந்த பின்னர் தங்கள் உயிரையும் உணர்வுகளையும் செத்து விடாமல் காப்பாற்றிய அந்த இளைஞனைப் பார்ப்பதற்காக அவர் தனக்குக் கொடுத்த அதே ஜீன்ஸையும் எடுத்துக் கொண்டு அவர்கள் இருவரும் திரும்ப வந்திருந்ததுதான் யாவரையும் நெகிழ்ச்சிக்குட்படுத்தியது. தர்ஷனாவை மீண்டும் வந்து பார்த்து தங்கள் உயிர் கலந்த நன்றிகளைத் தெரிவித்த இவ்விரு வெளிநாட்டுப் பெண்மணிகளும் கிக்கடுவவில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்குச் சிறு உதவித் தொகையும் வழங்கினார்கள் என் பதுதான் இங்கு குறிப்பிடக் கூடியது.

உதவி செய்வதற்கும் மனிதாபிமானத்திற்கும் மதம் இனம் மொழி ஏது? மனம் மட்டும் போதுமே...

தமிழில்
**த.கிருத்திகா**

## சாரதா சேவாச்சிரமம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் செல்வபுரம் கிராமத்திலுள்ள மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டி, பாடசாலை உபகரணங்கள், விளக்கு (லாம்பு), மேசை மணிக்கூடு, பால் மா, சீனி என்பன வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு கோண்டாவில் ராமகிருஷ்ண வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் ச.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளதாக சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார். (அ)

## பயிற்சி வகுப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள ஐந்து கிராமங்களில் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட உழைக்கும் நிறுவனம் பால் நிலை சமத்துவ பயிற்சி வகுப்புக்களை நடாத்தி வருகிறது.

இந்தவகையில் கடந்த மாதம் ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, போக்கறுப்பு, கல்லாறு ஆகிய கிராமங்களில் இப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன. (ற-35)

## 4ஆம் கட்ட கொடுப்பனவு விரைவில்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 4ஆம் கட்டமாக 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது. (ற-35)

## துரித வேலைத் திட்டம்

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தட்டுவன்கொட்டி, புன்னை நீராவி, உமையாள்புரம், புளியம்பொக்கணை, கேவில் வயல் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் வடக்குக் கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு துரித வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (து)

## கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகள்

சென்ற மாதம் 28ஆம் திகதி மனித நேய மிதிவெடி அகற்றும் பிரிவினரால் பளை பிரதேச செயலகத்தில் மிதிவெடி அகற்றப்பட்ட தர்மக்கேணி, பெரியபளை, தாமரைக்குளம் ஆகிய பிரதேசங்கள் மக்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கண்ணிவெடி அகற்றும் பிரிவுப் பணிப்பாளர் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராஜநாயகம் பிரதேச செயலர் சிவசிறி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய அரசாங்க அதிபர் மனித நேய மிதிவெடி அகற்றும் பிரிவினருக்கு நன்றி தெரிவித்ததோடு மேலும் பல பிரதேசங்களில் இவ்வாறான செயல் திட்டங்கள் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (து)

## வீதி திருத்தம்

தர்மக்கேணி புலோப்பளை மேற்கு வீதி திருத்தத்திற்கு உடனடி நடவடிக்கையைப் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலர் ச.சிவசிறி மேற்கொண்டுள்ளார். (து)

# சமாதானம் வேண்டுமானால் வட - கிழக்குக்கு அதிகாரம் வழங்க வேண்டியது அவசியம்

## -கிரிபத்கொடவில் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கையின் கீழ் மாகாண சபைகளின் அதிகாரங்களைவிட அதிக அதிகாரங்



களை வடக்கு கிழக்குப் பிரதேசத்திற்கு தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப்புலிகளும் கோரியுள்ளார்கள்.

சமாதானம் வேண்டுமானால் இந்த அதிகாரங்களை வழங்க வேண்டியது அவசியமாகும் என ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த அதிகாரங்கள் வழங்கப்படும் போது நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும். இதற்குப் பிரதான இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

எவராவது ஐக்கிய இலங்கைக்கும் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் பாதகம் ஏற்படும் வகையில் அதிகாரப் பரவலாக்கலை யோசனையாக முன்வைப்பார்களே ஆனால் அதனை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். (ற-9)

# மீன் ஏல விற்பனை நிலையம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள 10 கிராமங்களில் மீன் ஏல விற்பனை நிலையங்களை அமைக்க யு.என்.டி.பி நிறுவனம் முன் வந்துள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, தாண்டிக்குளம் ஆகிய கிராமங்களிலே இவ் ஏல விற்பனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு விற்பனை நிலையமும் ரூபா 9 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக கிராம மட்டத்தின் கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களிற்கும் யு.என்.டி.பி நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று அண்மையில் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-35)

## வடமராட்சி கிழக்கில்

# வேலைத் திட்டங்களை மேற்கொள்ள பேராயர் குழுவினர் முன்வருகை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிற்கு அங்கிலியன் திருச்சபை மறைமாவட்ட பேராயர் அதி வணக்கத்திற்குரிய டிலிப் சிக்கபறோ தலைமையிலான குழுவொன்று விஜயம்செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டதுடன் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்துள்ளனர்.

இவர்களுக்கு முதற்கட்டமாக ஒரு தொகுதி கட்டுமரங்கள் வழங்கல், பனிக்கட்டி ஆலை இதற்கமைய நிர்மாணித்தல் மற்றும் இப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கல் என்பவற்றைச் செய்வதற்கு இக்குழுவினர் முன்வந்துள்ளனர்.

யாழ்ப்பாண குரு முதல்வர் நேசரூபன் அடிகள், கிளிநொச்சி, உடுத்துறை பங்குகளின் பொறுப்பாளர்கள் வணபிதா சாள்ஸ் டேவிட், வணபிதா மனோரூபன், நிறுவன ஆலோசகர் பொறியியலாளர் ஜெயவீரசிங்கம் ஆகியோர் அடங்கிய குழுவினரே இப் பகுதிக்கு விஜயம் செய்திருந்தனர். (ற-35)

# வட - கிழக்கில் சுதந்திர தேர்தலை நடத்த பூரண நடவடிக்கை

## -ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ

(கொழும்பு)

வடக்கு -கிழக்கில் சுதந்திமான நேர்மையான தேர்தலொன்றை நடத்துவதற்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இம்முறை தேர்தலை 95 சதவீதம் நேர்மையான தேர்தலாக நடத்த முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தேர்தல் கடமைகளில் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் தலையீடு செய்ய வேண்டாம் என்று ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவித்த அவர் வடக்கு - கிழக்கு மக்களின் சுதந்திரமான வாக்களிப்பு உரிமையைப் பாதுகாப்பதே தனது நோக்கம் என்று கூறியுள்ளார். (ற)



## கிணறுகள் அமைப்பு

பச்சிளைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தம்பகாமம், இயக்கச்சிப் பகுதிகளில் டெனிஸ் அகதிகள் பேரவை (D.R.C) அமைப்பினால் சுத்தமான நீரைப் பெறும் நோக்கில் மேற்படிப் பிரதேசங்களில் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (து)

## பாடசாலை விடுமுறை

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளின் காரணமாக எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை யாழ்ப்பாண வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளும் மூடப்பட்டிருக்கும் என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த)

# சச்சின் 41

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை



'பெப்ஸிகோப்பை' யில் இந்தியா நான்கு லீக் போட்டியில் தோல்வியடைந்தது. இப் ரேலிய அணிக்கு சச்சின் போன்ற றதில் எந்தத் தவறும் இல்லை வாவ்.

ஷார்ஜாவில் அன்றைய பிறந்தநாள் பரிசுகளைப் கும். ஆட்டநாயகர் அன்றைய போட்டியில் பரிசு-500 டொலர்கள், அடித்ததற்கான பரிசு- அரை சதத்துக்கு தவிர, தொடர்நாய ஓபல் ஆஸ்ட் இவை மதிக்கிற

முழுவதுமே டாட்டங்களில் பங் அடுத்தடுத்த போட் உலகெங்கும் உள்ள புகழ்கிறார்கள். டான் ஒப்பிடப்பட்டது அந்த போட்டியாளராக கரு முடிவில் தனது கிக் கொண்டார். என்னுடைய பந் வரும் என்று பிரமிப்

போட்டிகளிலும் வென்று இறுதிப் போது அதே வேதனை ஆஸ்தி ஒரு மிகச்சிறந்த வீரரிடம் தோற் என்றார் ஆஸ்திரேலிய கேப்டன் ஸ்டீவ்

தினம் சச்சினுக்குக் கிடைத்த பட்டியல் போட்டால் மூச்சடைக் விருது -2500 அமெரிக்க டொலர்கள், அதிக சிக்ஸர்கள் அடித்ததற்கான தொடர் முழுதும் அதிக சிக்ஸர்கள் ஆயிரம் டொலர்கள், வேகமான ஒரு பரிசு-ஆயிரம் டொலர்கள் இவை கராகத் தேர்வு பெற்றதற்கான பரிசு-ஒரு ராகார்!

அனைத்தையும் விட நான் பெரிதாக பிறந்தநாள் பரிசு இந்திய அணி கோப் பையை வென்றதுதான் என்றார் சச்சின். அவர் பரிசாகப் பெற்ற புத்தம்புது காரில், கோப் பையும் கையுமாக ஏறி அமர்ந்து இந்திய அணி உற்சாகமாக மைதானத்தைச் சுற்றி வர இந்தியா சச்சினின் மறக்கமுடியாத பிறந்தநாள் கொண் கெடுத்துக் கொண்டது.

டிகளில் சச்சின் அடித்த அந்த இரு சதங்களையும் ரசிகர்களும் கிரிக்கெற் நிபுணர்களும் பரவசத்தோடு பிராட்மேன் போன்ற சகாப்த வீரர்களோடு சச்சின் இரு ஆட்டங்களுக்குப் பிறகு தான். சச்சினின் தப்பட்ட ஷேன் வார்ன் இறுதிப் போட்டியின் சட்டையில் சச்சினின் ஆட்டோகிரா:ப் வாங் இனிமேல் நான் தூங்கும்போது கூட சச்சின் துகளால் சிக்ஸர் அடிப்பது போல்தான் கனவுகள் போடு குறிப்பிட்டார் அவர்.

1998ஆம் ஆண்டு மொத்தம் 34 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய சச்சின் 1894 ரன்கள் குவித் தார். ஒன்பது சதங்களும் ஏழு அரை சதங்களும் இதில் அடக்கம். 12 போட்டிகளில் ஆட்ட நாயகர் விருதையும் நான்கு முறை தொடர் நாயகர் விருதையும் வென்றார் சச்சின். இதையெல்லாம் விட முக்கி யமான சாதனை இந்திய அணி வெற்றி பெற்ற நான்கு கோப்பைகளின் இறுதிப் போட்டியிலும் சச்சின் சதமடித்து ஆட்டநாயகர் விருதையும் பெற்றிருந்தார்!

## 17. பிராட்மெனும் சச்சினும்

கிரிக்கெற் உலகின் பிதாமகராக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறவர் சர். டான் பிராட் மென். தான் விளையாடிய ஆட்டங்களில் எல்லாம் 100, 200, 300களாகக் குவித்த சூரர் அவர்!

1996 உலகக் கோப்பையில் இந்தியா- ஆஸ்திரேலியா ஆட்டம், சச்சின் அபாரமாக விளையாடி 90 ரன்கள் எடுக்கிறார்.

அந்தப் போட்டியை தொலைக் காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தார் டான் பிராட்மென். உடல் தளர்ந்த எண்பத்தெட்டு வயது என்றாலும் தணியாத கிரிக்கெற் ஆர்வத்தால் தற்கால கிரிக் கெற்றர்களைக் கூர்ந்து கவனிக்கிறவர் பிராட் மென். சச்சினைப் பற்றி யாரோ அவருக்கு முன் னமே சொல்லி இருந்தார்கள். இப்போது இந்தப் போட்டியில் சச்சின் விளையாடுவ தைப் பார்க்கிறபோது தன்னுடைய ஆட்டத்தைப் பார்ப்பது போலவே இருக்கிறது என்று உணர்கிறார் அவர். 'ஜெஸ்ஸி...' தன் மனைவியை அழைக்கிறார்.



அவர் வந்ததும் விளையாடிக்கொண்டிருக்கிற சச்சினை அவருக்கும் காண்பிக்கிறார். இந்தப் பையனின் ஆட்டத்தைப் பார், நான் விளையாடுவதைப் பார்ப்பது போலவே இருக்கிறது.

சச்சினை உன்னிப்பாகப் பார்த்துவிட்டு, ஆமோதிப்பாகத் தலையாட்டுகிறார் ஜெஸ்ஸி. "ஆமாம் உங்கள் ஆட்டத் துக்கும் இவருடைய ஆட்டத்துக்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன"

அதன் பின்னர் சச்சின் விளையாடிய சில போட்டிகளை வீடி யோவில் பார்க்கிறார் டான் பிராட்மென். தன்னுடைய நெருங் கிய நண்பர்களிடமும் சச்சினைப் பற்றி சொல்கிறார். சச்சின் என்னைப் போலவே விளையாடுகிறார் என்று எனக்குத் தோன் றுகிறது. அவருடைய ஆட்டத்தை ஒவ்வொருமுறை பார்க் கும்போதும் நான் இப்படித்தான் ஆடியிருப்பேன் என்று உணர் கிறேன்.

1996ஆம் ஆண்டு மே மாதத்தில் டான் பிராட்மெனின் பேட்டி ஒன்றை ஆஸ்திரேலிய தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அதில் சச்சின் பற்றிய தனது கருத்தை பிராட்மென் வெளிப்படையாகத் தெரிவித்த போது கிரிக்கெற் உலகமே ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்றது. பிராட்மெனைப் போல் விளை யாடுகிற இன்னொருவரா? அதெப்படி இருக்க முடியும்?

நவீன கிரிக்கெற் வரலாற்றில் ஒரு சகாப்தமாக நிலைபெற்றிருக்கும் டான் பிராட் மென் தன்னோடு இன்னொரு வீரரை ஒப்பிட்டுச் சொல்கிறார் என்றால் அது எத்தனை பெரிய கௌரவம்!

இதுபற்றி செய்திகள் இந்தியாவை அடைந்ததும் சச்சின் உடனடியாக தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். என்னுடைய இத்தனை ஆண்டு கிரிக்கெற் வாழ்க்கையில் நான் பெற்றிருக்கிற மிகப் பெரிய பாராட்டும், கௌரவமும் சர். டான் அவர்கள் என்னைப் பற்றி சொல்லியிருக்கும் இந்த வார்த் தைகள்தான். அவருடைய இந்தக் கருத்தை நான் ஒரு பொக்கிஷம் போல சேகரித்து வைத்துக் கொள்வேன். ஆனால் தயவுசெய்து என்னை அவரோடு ஒப்பிடாதீர்கள். டான் பிராட்மெனோடு ஒப் பிடத்தக்க ஒரு வீரர் இதுவரை பிறக்கவில்லை. இனிமேல் பிறக்கப்போவதும் இல்லை.

(தொடரும்)

## கல்வியின் முக்கியத்துவம் பற்றி விளக்க பெற்றோருக்கு வீடியோப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

பாடசாலை செல்லாத பிள்ளை களை இனங்கண்டு அப்பிள் ளைகளின் பெற்றோர்களை வீடு வீடாகச் சந்தித்து கல்வியின் முக் கியத்துவம் பற்றியும், பாடசாலை செல்ல வேண்டியதன் அவசியம் பற்றியும் பிள்ளைகள் மன அழுத் தத்திற்குட்படாதிருத்தலை உறுதி செய்யவும், கல்வி பிள் ளைகளின் அடிப்படை உரிமை என்பது பற்றியும், பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் சிறுவர் உரிமை மீறல் எனவும் விளக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சிறு வர் பாதுகாப்பு நிதியத்தின் அனு சரணையுடன் தயாரிக்கப்பட்ட வீடியோப் படக்காட்சி பன்னிரண்டு கிராமங்களில் காண்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தீவக வல யக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி. இராதாகிஷ்ணன் அறிவித்துள் ளார்.

கல்வியின் முக்கியத்துவம் பற்றி பெற்றோருக்கு விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் நோக்கில் காரைநகர் பிரதேசத்தில் ஊரிக் கிராமம், பாலாவோடை, களபூமி, தோப்புக்காடு கிராமங்களைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு வீடி யோப் படக்காட்சி காண்பிக்கப் பட்டுள்ளது. இதில் நூற்றுக் கணக் கான பெற்றோர் கலந்து விளக் கம் பெற்றுள்ளனர்.

இங்கு பதினைந்து பிள்ளை கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மாலை நேர வகுப்பு எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காரை சுந்தர மூர்த்திநாயனார் வித்தியால யத்தில் நடத்துவதற்குத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. வேலணைப் பிரதேசத்தில மண்கும்பான், அல் லைப்பிட்டி மக்களுக்கான சந்திப் பும் கலந்துரையாடலும் இடம் பெற்றது. பதினைந்துக்கு மேற் பட்ட பிள்ளைகள் இனங்காணப் பட்டனர். இப் பிள்ளைகளின் பெற் றோருக்கும் வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்பட்டது. இவர்களுக் கான கற்றல் நிலையம் அல்லைப் பிட்டி பராசக்தி வித்தியாலயத் தில் அதே தினத்தில் நடத்துவ தற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் வேலணைப் பிரதேசத்தில் துறையூர், கண்ணாபுரம், வேல ணைமேற்கு, அம்பிகைநகர் பெற் றோருக்கான கல்வி விழிப்புணர்வு வீடியோப் படக்காட்சி காண்பிக் கப்பட்டுள்ளது. இங்கு பாடசாலை செல்லாத நான்கு பிள்ளைகள் இனங்காணப்பட்டுளளனர். இவர் களை உரிய பாடசாலையில் இணைக்க ஆலோசனை கூறப் பட்டுள்ளது.

மேலும், பெற்றோருக்கான கல்வி விழிப்புணர்வு வீடியோப் படக்காட்சி ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் நாரந்தனை வடக்கு, தம்பாட்டி, ஊர்காவற் றுறை மையப்பகுதி, கரம்பொன் கிழக்கு, கரம்பொன் மேற்குப் பகுதியில் வாழும் பெற்றோர் களுக்குக் காண்பிக்கப்படவுள் ளது. இதனை தீவக கல்வி வல யத்தின் முறைசாரா உதவிக் கல்விப் பணிப்பாளரும் யுனி செவ் வின் வலய இணைப்பாள ருமான க.கணபதி திட்டமிட்டு செயற்படுத் தவுள்ளார். (அ)

## வீதியைத் திருத்துமாறு கோரிக்கை

ஊரெழு பிள்ளையார் கோயில் வீதி மற்றும் மின்சார நிலைய வீதியிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் வீதி ஆகியன பல வரு டமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. மழைகாலத்தில் மழை வெள்ளம் இவற்றில் தேங்கி நிற்பதால் இவ் வீதியூடாக ஊரெழு கணேசா வித்தியாசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பல இடையூறுக ளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டோர் இவ் வீதியை விரைவில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுககுமாறு அவ் வீதியைய பயன்படுத்துவோர் தரப் பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. (ற-25)

## பயிற்சி வகுப்பு

(சாவகச்சேரி)

தெரிவத்தாட்சி அலுவல ரால் ஏற்கனவே அறிவிக்கப்பட் டதற்கிணங்க ஜனாதிபதித் தேர் தல் சம்பந்தமாக ஆசிரியர்களுக் கான பயிற்சி வகுப்பு கடந்த ஞாயிற் றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். செயலக தெரிவத்தாட்சி அலு வலரால் நடாத்தப்பட்டது.

பயிற்சி வகுப்புக்குத் தாமத மாக வந்த ஆசிரியர்கள் எவருக் கும் உள்ளே செல்ல அனுமதிக் கப்படாததால் அவர்கள் அனை வரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல் வதைக் காணக்கூடியதாக இருந்தது.

அடுத்து மாலை 2.00 மணிக்கு முன்பாக அனைவரும் சமுகமளித் தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-108)

## சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தால் நடத்தப்பெறும் சமய தீட்சை வழங் கும் வைபவம் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கல்லூரியில் உள்ள சோமாஸ்கந் தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ செ. கைலா சநாதக்குருக்கள் தீட்சாகுருவாகச் செயற்பட்டு நிகழ்வுகளை நடத் தவுள்ளார். (ற)


அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி, மருத்துவம், உளவியல், சோதிடம், ஆன்மீகம், விஞ்ஞான ஆராய்ச்சிகள், வரலாறு, பொருளியல், சமூகவியல், அரசியல், கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வலம்புரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி

எந்த நாட்டில் ஆள்வோருக்கு அதிகமாக ஆள வேண்டுமென்ற இச்சை வெறி ஏற்படுகிறதோ அங்கு ஒரே குழப்பம் தான் உண்டாகும்.

-பிளேட்டோ-

வலம்புரி

## தேர்தல் வந்ததும் நல்லதுதான்

ஜனாதிபதிப் பதவியை 2006 ஆம் ஆண்டு வரை நீடிக்கும் சந்திரிகா குமாரதுங்கவின் எண்ணம் நிறைவேறாமல் போனதன் காரணமாக 2005 தேர்தல் ஆண்டாகியது.

13 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும், ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கரம சிங்கவிற்கும் இடையிலேயே கடுமையான போட்டி நடைபெறுகின்றது.

இருவரில் யாருக்கு வெற்றி என்பதை தீர்மானித்து கூற முடியாத அளவிற்கு போட்டி மிகவும் இறுக்கமாக இருக்கின்றது. இது இலங்கை முழுவதற்குமான தேர்தலாக இருந்தாலும் வடக்கு -கிழக்கு தமிழ் மக்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கும் என்பதும், வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதில் மகிந்தவும் ரணிலும் எந்தளவு தூரம் முயற்சி செய்கின்றனர் என்பதும் ஆராயப்படவேண்டிய விடயம்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை அவாகள் ஜனாதிபதித் தேர்தலில் ஆர்வம் கொண்டவர்களாக இல்லை.

ஏதோ தேர்தல் நடக்கின்றது இராமன் வந்தால் என்ன, இராவணன் வென்றால் என்ன, கூட வந்த குரங்குதான் ஜனாதிபதியானால் என்ன என்பது அவர்களுடைய நிலை.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறையற்று இருப்பதன் காரணமாக இரண்டு பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களும் தமது நிலைப்பாட்டை மாற்றிடவேண்டியதாயிற்று.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்கு தனக்கு பெரிதாக கிடைக்காதென்ற முடிபை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஏற்கனவே எடுத்துக்கொண்டிருக்க வேண்டும்.

அதனால்தான் போலும் அவர் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதில் அதிக கவனம் செலுத்தாது ஜே.வி.பி. ,ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டார்.

அதே நேரம் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரசிங்க வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகள் தனக்கே கிடைக்குமென நம்பியிருந்தார்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறையற்றுள்ளார்கள் என்ற முடிவை அறிந்ததும் சுருதியை மாற்றி இசைக்க வேண்டிய உடனடித்தேவை அவருக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணாவைப் பிரித்தது முதல் விடுதலைப்புலிகளின் கப்பல்களை அழித்ததுவரை ரணில் விக்கிரசிங்கவின் சாதனைகள் என ஐக்கிய தேசியக்கட்சியின் நவீன் திஸ்ஸநாயககாவும், மிலிந்த மொறகொடவும் கூறியுள்ளனர்.

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் என்பதை அறிவதற்கு இந்தத் தேர்தல் வந்ததும் நல்லதுதான்.

# சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முடக்கமும் படுகொலைகளுமே பதவிவிலகலுக்கு காரணம்

## -வெளிநாட்டு ஊடகத்திற்கு ஜயந்த தனபால பேட்டி



(கொழும்பு)

அரசற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்குமிடையேயான சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முடக்கம் மற்றும் தொடரும் படுகொலைகள் என்பன காரணமாகவே தான் பதவி விலகியுள்ளதாக ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

ஆனால், இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்கள் தொடர்பாக தாம் தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு மாறாக உண்மை நிலைமைகள் தொடர்ந்து அம்பலப்படுத்தப் பட்டதால் தான் அவர் பதவி விலகியிருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

அரசாங்கத்தின் சமாதான செயலகத்தின் பணிப்பாளராக கடந்த ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து பணியாற்றி வரும் ஜயந்த தனபால தனது பதவியிலிருந்து நேற்று முன்தினம் விலகினார்.

தற்போது ஸ்டாக்ஹோம் நகரில் தங்கியுள்ள ஜயந்த தனபால, தனது விலகல் குறித்து ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பிவைத்திருந்தார். சந்திரிகாவும் அவரது விலகலை ஏற்றுக்கொண்டுள்ளார். இந்நிலையில் வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த ஜயந்த தனபால,

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முடக்கம் மற்றும் தொடரும் படுகொலைகள் என்பன தொடர்பிலேயே தனக்கு அதிருப்தி ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் தொடரும் படுகொலைகளின் சூத்திரதாரிகள் இராணுவத்தினரும், புலனாய்வுப் பிரிவினருமே என்றும் கருணாகுழு என்ற பெயரிலான இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவை இராணுவப் புலனாய்வுப் பிரிவே வழி நடத்துவதாகவும் விடுதலைப் புலிகள் குற்றம்சாட்டினர்.

ஆனால், கருணா குழு என்ற ஒன்று அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுள் இல்லை என்றும், அவர்கள் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் இருந்தே இயங்குவதாகவும் எனவே அவர்களைத் தாங்கள் கட்டுப்படுத்த வேண்டிய தேவை இல்லை என்றும் ஜயந்த தனபால காட்டமாக மறுத்துரைத்திருந்தார்.

எனினும், விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டு. அம்பாறை அரசியல்துறைப பொறுப்பாளர் கௌசல்யன் கொலை தொடர்பாக அமைக்கப்பட்ட ஆணைக்குழு, ஜனாதிபதிக்காக தனது பரிநதுரையில் அரச கடடுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள ஆயுதக் குழுக்கள களையப்பட வேண்டுமெனவும் பரிந்துரைத்திருந்தது. அத்தோடு தீவுச் சேனையில் ஆயுதக் குழுககள் இருப்பதைக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும உறுதிப்படுத்தியிருந்தனர். இந்நிலையில், கருணா குழு என்ற பெயரில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் பற்றியும் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதலுக்கு இராணுவத்தினரும் இணைந்து செல்வது பற்றியும் அண்மையில் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த மூவர் அம்பலப்படுத்தியிருந்தனர்.

கருணா குழுவுடன் தொடர்புடைய இராணுவ முகாம்கள் மற்றும் இராணுவப் பொறுப்பதிகாரிகளின் பெயர்களையும் அவர்கள் வெளியிட்டனர். இவையனைத்தும் ஆயுதக்குழுக்கள் தொடர்பான ஜயந்த தனபாலவின் கூற்றை முற்றாகவே பொய்யாக்கின. ஆயுதக்குழுக்கள் தொடர்பான உண்மையையும், இராணுவத்தின் நிழல் யுத்தத்தையும் வெளியுலகின் பார்வைக்குக் கொண்டு வந்திருந்தன.

இந்நிலையானது ஜயந்த தனபாலவை ஒரு மலிவான அரசியல்வாதியாக அடையாளம் காட்டியது. இதனைத தொடர்ந்தே அவர் தனது பதவியிலிருந்து விலகியதாகத தெரியவருகிறது. (ற)

# புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச எல்லையிலிருந்து 1 கிலோ மீற்றரில் கொத்தணி வாக்களிப்பு நிலையம்

## அமைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதற்காக அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தலொன்றை நடத்துவதற்காக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயகக முன்வைத்த 10 யோசனைகளை கொழும்பு உயர் நதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த யோசனைகளை செயற்படுத்த நேற்று முன்தினம் அனுமதித்த நீதிமன்றம் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் தொலைவில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைத்தல் என்ற தேர்தல் ஆணையாளரின் யோசனைகளில் திருத்தம் செய்து விடுவிக்கப்படாத பிரதேச எல்லையிலிருந்து 1 கிலோ மீற்றர் தொலைவில் இந்த வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதறகு உத்தரவிட்டது. விடுவிக்கப்படாத பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வந்து வாக்களிப்பதற்கென 2 கட்டங்களில் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்யுமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான 3 நீதிபதிகள் குழு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. வாக்காளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுமெனில், அதுபற்றிய முடிவெடுக்கும் அதிகாரத்தை வாக்களிப்பு நிலையப பொறுப்பாளருக்கு வழங்குவதற்கும் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. (ற)

# 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' விசாரணையால் பிரதமரின் அடிப்படை உரிமை மீறப்படவில்லை

## லயனல் குணதிலக்க நீதிமன்றில் தெரிவிப்பு

அம்பாந்தோட்டை வங்கிக் கணக்கு மோசடி பற்றி விசாரணைகள் நடத்தப்படுவதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷவின் அடிப்படை உரிமை மீறப்படாது என்று இரகசியப் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் லயனல குணதிலக்க உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மோசடி தொடர்பான விசாரணைகளை இடைநிறுத்துமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்த மனுவிற்கு எதிர்ப்புத் தெரிவிதது இரகசியப் பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலக்க நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பிர் கபீர் ஹாசிம் அம்பாந்தோட்டை வங்கிக் கணக்கு பற்றி செய்திருந்த முறைப்பாட்டிற்கமைய அதுபற்றிய விசாரணைகளை தாம் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்த லயனல் குணதிலக்க அதற்கென சட்டமா அதிபரின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டதாகக் கூறினார். சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய அம்பாந்தோட்டை வங்கிக் கணக்குப் பற்றிய சோதனைகளை மேற்கொள்வதற்கென நீதிமன்ற உத்தரவொன்றைப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார். ஆழிப்பேரலை நிவாரண நிதி முறையற்ற வகையில் கையாளப்பட்டுள்ளதா என்பது பற்றிய விசாரணைகளை மேற்கொள்வதற்காக இந்த உத்தரவைப் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்த லயனல் குணதிலக்க, இந்த விசாரணைகளை இரகசியமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும் அதனை விரைவில் விசாரணை செய்து முடிப்பதற்குத் திட்டமிட்டிருந்ததாகவும் கூறினார்.

அதனால் எந்தவொரு தரப்பிற்கும் அசௌகர்யத்தை ஏற்படுத்தும் எண்ணத்தில் இந்த விசாரணைகள் மேற்கொளள வில்லையென்றும் இதனூடாக பிரதமரின் அடிப்படை உரிமை மீறப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டைக் கணக்கு மீதான விசாரணையை இடைநிறுத்துமாறு மஹிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்த மனுவிற்கமைய உயர் நீதிமன்றம் அண்மையில் இந்த விசாரணைக்கான இடைக்காலத் தடையை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## 14 ஆம் திகதியிலிருந்து ஒரு வாரத்திற்கு அனைத்து பாடசாலைகளும் மூடப்படும்

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் ஒருவார காலத்திற்கு நாட்டின் அனைதது பாடசாலைகளையும் மூடுமாறு கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

பல பாடசாலைகள் வாக்குச் சாவடிகளாகவும் வாக்குகளை எண்ணும் நிலையங்களாகவும் பயன்படுத்தப்படுவதால் ஒருவார காலத்திற்கு அனைத்துப் பாடசாலைகளையும் மூடுவதற்கு தீர்மானித்ததாக கல்வியமைச்சின் பாடசாலைகள் பிரிவைச் சேர்ந்த பிரதிப் பணிப்பளர் டபிள்யு கே.எம்.விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

கல்விததுறை சார்ந்த அதிகாரிகள் பலர் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினாா. அனைத்துப் பாடசாலைகளும் 16ஆம் திகதிமுதல் 18ஆம் திகதிவரை 3 தினங்கள் மாத்திரமே மூடுவது என ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், தேர்தல செயலகத்தின் வேண்டுகோளுக்கமைய இந்தத் தீர்மானம் மாற்றப்பட்டுள்ளது. இதுபற்றி அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும விஜயதுங்க கூறியுள்ளார். (ற-7)

## தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்



இடைவிடாத இறை நினைப்பினால் மனதை எல்லையற்ற இறைவனிடம் ஒன்ற வைப்பதனால் கிடைப்பது ஆனந்தமே. அல்லது மனதை இறைவனிடம் ஒன்றுபடுத்தாமல் இறைவனுடைய லீலையிலேயே ஈடுபடுத்தியிருந்தாலும் ஆனந்தமே கிடைக்கிறது.

சுவாமி விவேகானந்தர்

# நீராவியடியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிறவுண்வீதி இரண்டாம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை நுழைந்த திருடர்கள் அங்கிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்றினை அபகரித்துச் சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை 2.45 மணியளவில் கையில் கூரிய ஆயுதங்களுடன் வந்த மூவர் இத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

ஜன்னல் கம்பியை வளைத்து சிறுவன் ஒருவனை உள்ளே அனுப்பி திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது வீட்டில் இருந்தவர்கள் விழித்துக்கொண்டு கூக்குரலிட்டதனால் கள்வர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது வீட்டில் நிறுதிவைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்றையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

(கு-132,133)

# ஆணின் சடலம் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

பலாலி மயிலிட்டிக் கடற்பரப்பில் ஆணின் சடலம் ஒன்று நேற்றுக்காலை கரையொதுங்கியது. அரைக்காற்சட்டை அணிந்த ஆணின் சடலமே கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை நேரில்சென்று பார்வையிட்ட மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி இளங்கோவன், சடலம் உருக்குலைந்த நிலையில் இருப்பதால் அடையாளம் காணும்பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

அடையாளம் காணும்பொருட்டு சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் கடந்தவாரம் மீனவர் ஒருவர் காணாமல்போனதாகவும், அவரின் சடலமே இதுவாக இருக்கலாமென்வும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-4,8)

# தமிழ்மக்களின்....

அக்கறையற்றே இருக்கிறார்கள். அவர்களின் அரசியல் தெளிவின் நிலைப்பாடே இதுவாகும்.

மக்கள் இரண்டு ஆட்சித் தலைவர்களின் கீழும் துன்பப்பட்டவர்கள். சிங்களப் பேரினவாதத்திற்குத் தலைமைதாங்கும் தேர்தலாகவே இது உள்ளது. இதனால் தமிழர்களுக்கு விமோசனம் இல்லை என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இரண்டு வேட்பாளர்களும் யாழ். குடாநாட்டுக்குச் சென்று உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நின்று கூறிய கருத்துக்கள் மக்களை புண்படுத்தியுள்ளன. துன்பமான வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு நெருக்குவாரங்களைத் தவிர்ப்பதற்கான சமிக்ஞைகளை அவர்கள் காட்டவில்லை. மாறாக இராணுவ ரீதியாக மேலாதிக்கம் செலுத்துகின்ற போக்கைக்காட்டியுள்ளனர்.

மக்கள் தீர்மானம் எடுக்கும் சக்தியாக இருக்கிறார்கள். சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தாயகப் பகுதிக்குள் வந்து செயற்பட்டால் மக்களின் நிலைப்பாடுகளை நேரடியாக உணர்ந்துகொள்வார்கள் என தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (ச)

# வன்முறைகளில் ஈடுபடுவோரை சுடப் பொலிஸாருக்கு அனுமதி!

## அநுராதபுரம் பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவு

வாக்குச்சாவடிகளுக்கு அருகில் வன்முறைகளில் ஈடுபடுபவர்களைச் சுடுமாறு சகல பொலிஸாருக்கும் அநுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் நடைபெறும் தினத்தன்று சகல பிரதேசங்களிலும் வன்முறையில் ஈடுபடும் நபர்களைத் தகுதி, தராதரம் பாராது சுட்டுத்தள்ளுமாறு அநுராதபுரம் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசிறி குணவர்த்தன ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேர்தல் தினத்தன்று நடமாடும் பொலிஸ் சேவைகள் மற்றும் சோதனைச் சாவடிகளையும் இணைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும்.

பொலிஸார் மட்டுமல்லாது இராணுவத்தினரும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இந்த நடவடிக்கைகள் தேர்தல் ஆணையாளரின் பணிப்பிற்கமையவே எடுக்கநேர்ந்தது என அவர் தெரிவித்தார். (ச-4)

# மாலைதீவுக்குச் செல்லமுற்பட்ட 11 பேர் கட்டுநாயக்கவில் கைது

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 11 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் கடவுச்சீட்டுக்களோ, பயணத்திற்கான பயணச் சீட்டுக்களோ காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் மாலைதீவுக்குச் செல்லும் விமானத்தில் செல்லவிருந்த சந்தர்ப்பத்தில் இவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களில் 5 பேர் பெண்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல விமான நிலைய அதிகாரிகள் உதவிவழங்கியுள்ளனர். சிவில் விமானசேவைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச-4,8)

# திணைக்களத் தலைவர்களுடன் கேணல் சொர்ணம் சந்திப்பு

திருகோணமலை சம்பூரில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனையில் வடக்குக் கிழக்கு அரச திணைக்களங்களின் பணிப்பாளர்களை திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு சம்பூரில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

திருகோணமலை நகரின் தற்போதைய அபிவிருத்திப் பணிகள் பற்றியும், இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களில் திருமலை மாவட்டம் புறக்கணிக்கப்படுவது தொடர்பாகவும், உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் இச் சந்திப்பில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணிதொடக்கம் 12.30 வரையிலான இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த இச்சந்திப்பில் 45 இற்கும் மேற்பட்ட பல்வேறுபட்ட திணைக்களங்களின் தலைவர்களும், பணிப்பாளர்களும் கலந்துகொண்டிருந்தனர். (ச)

# அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான இறுதி அறிவுறுத்தல் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்ளாதவர்கள் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஜனாதிபதித் தேர்தலில்....

அக்காலங்களில் நடைபெற்ற நிகழ்வுகளை மனதில்கொண்டு ஆராய்ந்து சிந்திக்கின்றபோது இக்கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மீது எம்மால் நம்பிக்கை வைக்கமுடியாது என்ற நிலைமைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். எமது மக்களும் இந்த நிலைமைகளை அனுபவித்து இருக்கிறார்கள், அவதானித்து இருக்கிறார்கள். அவர்களுக்கும் நிலைமைகள் எல்லாம் தெரியும்.

வடக்குக் கிழக்கில் வாழுகின்ற மக்கள் அனைவரும் நிலைமைகளைப் புரிந்தவர்கள். எமது மக்களும் இதே சிந்தனையில்தான் இருக்கிறார்கள். எமது மக்களும் இதேவிதமான முடிவைத்தான் எடுப்பார்கள் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

இத் தேர்தலில் எமது மக்கள் அக்கறை காட்டவேண்டியதில்லை என்பது எமது தெளிவான கருத்து. தமிழ்மக்கள் வாக்களிக்க விரும்பினால் நிச்சயமாக தடுக்கமாட்டோம். தமிழ்மக்களினது ஜனநாயக உரிமையை பறிக்கும்நோக்கம் எமக்கு இல்லை. ஆனால் அனுபவங்களின் அடிப்படையில் நிச்சயம் இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறைகாட்டமாட்டார்கள் என்பது எமது நம்பிக்கை என அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஹெரோயின் மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து ஒருதொகுதி ஹெரோயின் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. நேற்று முன்தினமிரவு நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே ஒரு கிலோக்கிராம் ஹெரோயினும், 9 கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைக்குள் ஹெரோயினும், கையடக்கத் தொலைபேசிகளும் எவ்வாறு கொண்வரப்பட்டன என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்றுவருவதாக அவர் கூறினார்.

இந்தப் பொருட்கள் சிறைச்சாலைக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் சிறைச்சாலை அதிகாரிகள் அசமந்த நிலையில் இருப்பது குறித்து தெரியவருவதாகவும் நூர்தீன் மசூர் மேலும் தெரிவித்தார். (ச-8)

# எயிட்ஸ் நோயினால் 139 பேர் மரணம்

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த 38 பேர் கடந்த மாதம் இனங்காணப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கடந்த நான்கு மாத காலத்தில் நாட்டில் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்ட 200 பேர் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததாகவும், இவர்களில் 56 பேர் பெண்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளான நூறுபேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 1984 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை எயிட்ஸ் நோயினால் 139 பேர் உயிரிழந்துள்ளனர்.

எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்காகி இருக்கின்றமை குறித்து 2 இலட்சத்து 50 ஆயிரம் பேரிடம் வைத்திய பரிசோதனை நடத்தப்பட்டதாகவும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-8)











## திருமணைக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு

☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)

☆ விசேட வைபவங்கள் ☆ சுற்றுலாக்கள்



போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம்கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்

சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P:0777-903090 077-3086939,0777-246117, 077-6018467

(c-9843)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

மீசாலை கிழக்கு காட்டுவளவு கந்தசுவாமி ஆலய கட்டட நிதிக்கான (10.11.2005) மூன்றாவது அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுக்குரியவர்:

திரு. ஆ.தேவராசா
மீசாலை கிழக்கு, மீசாலை

(C-1830)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.